# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

## மானியக் கோரிக்கை எண். 32


**திரு. சி.வி. கணேசன்**

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2024

# அட்டவணை


| பொருளடக்கம் | பக்க எண் |
| --- | --- |
| முன்னுரை | 1–3 |
| தொழிலாளர் துறை | 4–76 |
| தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் | 77–133 |
| வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை (வேலைவாய்ப்புப் பிரிவு) | 134–159 |
| வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை (பயிற்சிப் பிரிவு) | 160–219 |
| மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்) | 220–241 |

# தொழிலாளர் நலன் மற்றும்

# திறன் மேம்பாட்டுத் துறை

## முன்னுரை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் நோக்கம், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா துறைகளில் உள்ள பணியாளர்களின் பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் புதிய கொள்கைகள், செயல்பாடுகள், திட்டங்கள் வாயிலாக அவர்களது நலனை உறுதிப்படுத்துதல் ஆகியவை ஆகும். இத்துறையானது, ஒவ்வொரு பணியாளருக்கும் பாதுகாப்பான மற்றும் நலன் சார்ந்த பணி நிலைமைகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை வழங்குவதில் இத்துறை ஈடுபட்டு வருகிறது. மேலும், இத்துறையானது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் வேலைவாய்ப்பு பிரிவால் செயல்படுத்தப்படும் தொழில் நெறிவழிகாட்டுதல், போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தனியார் வேலைவாய்ப்பு

அளித்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்குதல், ஆகியவற்றை நிர்வகித்து வருகிறது. தொழிற்பயிற்சி நிலையங்களின் பல்வேறு பணிகளும் இத்துறையால் மேலாண்மை செய்யப்படுகிறது.

இத்துறையின் கீழ் பின்வரும் துறைத்தலைமைகள் இயங்கி வருகின்றன.

1) தொழிலாளர் ஆணையரகம்
2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரகம்
3) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம்
4) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம்
(தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் வாயிலாக பல்வேறு தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துதல், சமரச பேச்சுவார்த்தை, சமூக பாதுகாப்பு திட்டங்களை அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்குதல், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழில் சார்ந்த நலம் மற்றும் பாதுகாப்பு, தொழில் நெறிவழிகாட்டுதல், தனியார் வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக பயிற்சியளித்தல், காப்பீடு செய்யப்பட்டவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு இலவச மற்றும் முழுமையான மருத்துவ வசதிகள் அளித்தல் இத்துறையின் முக்கிய பணிகளாகும்.

# 1. தொழிலாளர் துறை

## 1.1. நிர்வாக அமைப்பு

தொழிலாளர் ஆணையரின் தலைமையில் பல்வேறு தரத்திலான 550 அலுவலர்களின் உதவியுடன் இத்துறை செயல்படுகிறது. மாவட்ட அளவில், முறைப்படுத்துதல் மற்றும் சமூக நல நடவடிக்கைகள் உதவி ஆணையர் தரத்திலான அலுவலர்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

## 1.2. தொழிலாளர் துறை மூலம் அமலாக்கம் செய்யப்படும் சட்டங்கள்

தொழிலாளர் துறையில் அமலாக்கம் செய்யப்படும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் விவரம் பின்வருமாறு :

### 1.2.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

தொழிற்தகராறுகள் சட்டம், 1947, தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 மற்றும் தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 ஆகியவை தொழில் உறவுகளை நிர்வகிக்கும் சட்டங்கள் ஆகும்.

தொழில் அமைதியை பராமரிப்பதில் வேலையளிப்போர், தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் ஆகியோரது பங்களிப்பினை இச்சட்டங்கள் வரையறை செய்கிறது. மேலும் இச்சட்டங்கள், தொழிற்தாவாக்களை இணக்கமாக தீர்ப்பதற்கான நடைமுறைகள், தொழில் நல்லுறவுக்கான வழிமுறைகள், கூட்டுபேரம், தொழிற்சங்கங்களின் பதிவு குறித்த சட்டங்கள் குறித்தும் வரையறை செய்கிறது.

### 1.2.1.1. தொழில் தகராறுகள் சட்டம், 1947

தொழில் தகராறுகள் சட்டம் என்பது ஒரு சமூக சட்டமாகும். மாநிலத்தில் தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதன் மூலம் தொழிலாளர் நலன் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு இடையேயான சமநிலையை பராமரிக்க இச்சட்டம் முயற்சிக்கிறது. தொழிற்தகராறுகளுக்கு சமரசம், நடுவர் மன்றம் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் விசாரணை செய்து தீர்வு காணுதல் தொடர்பான வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை இச்சட்டம் வழங்குகிறது.

தொழில் அமைதியைப் பேணும் பொருட்டு தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தினருக்கு இடையேயான தொழிற்தகராறுகளை இணக்கமான முறையில் முடித்து வைக்க தொழிலாளர் துறையை சார்ந்த சமரச

அலுவலர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள்.

2023–2024 ஆம் நிதியாண்டில் சமரச அலுவலர்கள் 1,815 தொழிற்தாவாக்களை சுமுகமாக தீர்த்துள்ளனர். மேலும், 15 தொழில் நிறுவனங்களில் வேலை நிறுத்தங்கள் முடித்து வைக்கப்பட்டு 5000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் உரிமைகளும், நலன்களும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

தொழிற்தகராறுகளை தீர்ப்புகள் மூலம் விரைவாகவும், சரியான நேரத்திலும் தீர்த்து வைப்பதன் மூலம் தொழில்துறையில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான நோக்கத்துடன் தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் தொழிற்தகராறுகள் மீது தீர்வங்கள் வழங்க

தமிழ்நாட்டில் 18 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

1947–ஆம் வருடத்திய தொழில் தகராறுகள் சட்டம், அட்டவணை III–ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மீது தீர்வு காணும் மன்றமாக தொழிற் தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது.

### 1.2.1.2. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

இச்சட்டத்தின்படி, தொழில் நிறுவனங்களில் வேலையளிப்போர், சான்றளிக்கப்பட்ட நிலையாணை உத்தரவுகளின் கீழ் வேலைக்கான நிபந்தனைகளை வரையறுக்க வேண்டும். 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். 2023–2024 ஆம் நிதியாண்டில், 434 தொழில் நிறுவனங்களுக்கு மண்டல கூடுதல் தொழிலாளர்

ஆணையர்களால் நிலை ஆணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

### 1.2.1.3. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்கள் சட்டம், 1926, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு தொழிற்சங்கம் அமைப்பதற்கு வழிவகை செய்யும் சட்டமாகும். இந்தச் சட்டம் தொழிற்சங்கங்களை பதிவு செய்வதற்கும், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு சில சிறப்புரிமைகளையும் பாதுகாப்பினையும் வழங்க வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் 2023–2024 ஆம் நிதியாண்டில், 229 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.3.1. ஊதியம் வழங்குவது தொடர்பான சட்டங்கள்

சம்பள பட்டுவாடா சட்டம், 1936, குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948, சம ஊதிய சட்டம்,

1976, மிகையூதிய சட்டம், 1965 ஆகியவை ஊதியம் வழங்குவதை முறைப்படுத்தும் சட்டங்களாகும்.

### 1.3.1.1. சம்பள பட்டுவாடா சட்டம், 1936

இச்சட்டம் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள நபர்களின் ஊதியத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கவும், ஊதியம் உரிய காலத்தில் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யவும் மற்றும் ஊதியம் தொடர்புடைய கேட்பு மனுக்களை விரைந்து முடிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது. 1000–க்கும் குறைவான நபர்களை பணிக்கு அமர்த்தும் நேர்வில் ஒவ்வொரு மாதமும் 7வது நாளுக்கு முன்னதாகவும், 1000–க்கும் அதிகமான நபர்களை பணிக்கு அமர்த்தும் நேர்வில் ஒவ்வொரு மாதமும் 10வது நாளுக்கு முன்னதாகவும் ஊதியத்தினை வேலையளிப்பவர்கள் வழங்க வேண்டும். இச்சட்டம் மாதம் ரூ.24,000/–க்கு மிகாமல்

சம்பளம் பெறும் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்கு பொருந்தும். இச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பிடித்தங்களை மட்டுமே வேலையளிப்பவர்களால் தொழிலாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்ய இயலும்.

இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்கும் உரிய அலுவலர்களாக பணியாளர் இழப்பீட்டு ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2023–2024 ஆம் நிதியாண்டில், 15,735 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நீதிமன்றங்கள் மூலம் 6 வழக்குகள் முடிக்கப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.14,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர 117 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.56,62,066 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.3.1.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948

1948–ம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டமானது அட்டவணைத் தொழில்களுக்கு உரிய அரசால் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் உரிய கால இடைவெளிகளில் மறுநிர்ணயம் செய்வதற்கு வழிவகை செய்துள்ளது.

இச்சட்டம் பணியாளர்களின் வாழ்வாதாரத்தையும் அவர்களின் பணித்திறனையும் உறுதி செய்கிறது. தமிழகத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948–ன் கீழ் அட்டவணையில் 94 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 83 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதியமானது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன் பிரிவு 20–ன் கீழ் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை விசாரித்து தீர்வு காணும் அலுவலர்களாக வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2023–2024 ஆம் நிதியாண்டில் அமலாக்க அலுவலர்களால் 30,793 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்களில் 34 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.46,460 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 907 கேட்பு மனுக்கள் வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 945 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு ரூ.8,48,31,994/– வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.3.1.3. சம ஊதியச் சட்டம், 1976

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது மற்றும் பெண்களுக்கு எதிரான பாலின அடிப்படையிலான வேற்றுமையை தடை செய்வது ஆகியவற்றிற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் அமலாக்க அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களில் 9,319 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

### 1.3.1.4. மிகை ஊதியம் வழங்கல் சட்டம், 1965

20 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை பணியமர்த்தும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்கு இலாபம் அல்லது உற்பத்தி அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் மிகை ஊதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

கணக்கியல் ஆண்டு முடிவடைந்த 8 மாதங்களுக்குள் மிகையூதியம் வழங்கப்பட வேண்டும்.

மிகை ஊதியம் பெற பணியாளர்களின் மாத சம்பளம் ரூ.21,000/—க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் பணியாளர்கள் ஒரு கணக்கியல் ஆண்டில் குறைந்தபட்சம் 30 நாட்கள் அந்த நிறுவனத்தில் பணிபுரிந்திருக்க வேண்டும்.

மிகை ஊதிய கணக்கீட்டிற்கு பணியாளர்களின் ஒருமாத சம்பளமாக ரூ.7,000/— அல்லது உரிய அரசாங்கத்தால் அட்டவணையில் உள்ள தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் இவற்றுள் எது அதிகமானதோ அத்தொகை எடுத்துக் கொள்ளப்படும். குறைந்தபட்ச மிகையூதியம் பெறும் உரிமை என்பது ஒரு பணியாளரது சட்டப்படியான உரிமையாகும்.

### 1.3.2. வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், பத்திரிக்கை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிபுரிவதற்கேற்ற சூழலை முறைபடுத்தவும், வலியுறுத்தவும் இச்சட்டங்கள் வழி வகை செய்கிறது.

#### 1.3.2.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் அமலாக்க அலுவலர்களால் 38,162 ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு முரண்பாடுகள் கண்டறியப்பட்டு 10,187 முரண்பாடுகளுக்கு இசைவு தீர்வு முறையில் முடிக்கப்பட்டு இணக்க கட்டணமாக ரூ.20,38,100/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 8 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டு ரூ.15,000/- வேலையளிப்பவர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

பணிநீக்கம் தொடர்பான மேல்முறையீட்டு அலுவலர்களாக மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2023-2024 ஆம் நிதியாண்டில் 87 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**1.3.2.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம்

வழிவகை செய்கிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில் உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.2,39,96,767/- வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் 17,685 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 6,683 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவு தீர்வு முறையில் இணைக்கக் கட்டணமாக ரூ.11,46,800/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 19-ன் கீழ், பணிநீக்கம் தொடர்பான மேல்முறையீடுகளை விசாரித்து முடிவெடுக்க, தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமரசம்) மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

### 1.3.2.3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

இச்சட்டம் மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்களின் நலன் மற்றும் அவர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துகிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் 175 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் புதியதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 31.03.2024 அன்றுள்ளவாறு, இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 2,860 ஆகும். இந்நிறுவனங்களில் 1,23,972 தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2023–2024 ஆம் நிதியாண்டில் பதிவு, புதுப்பித்தல், திருத்தம் மற்றும் மாற்றங்களுக்கான கட்டணமாக ரூ.72,74,042/– வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலக்கட்டத்தில் 1,291 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 264 முரண்பாடுகள்

**கண்டறியப்பட்டு, ரூ.79,500/- இணைக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.**

**1.3.2.4. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகவும், இத்தொழிலாளர்களின் பணிநிலைமைகளை ஒழுங்குபடுத்தவும் தோட்டத் தொழிலாளர் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2,230 தோட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் மொத்த பரப்பளவு 62,334 ஹெக்டேர் ஆகும். இதில் 697 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் 54,879 ஹெக்டேர் பரப்பளவிலும் 1,533 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்கள் 7,455 ஹெக்டேர் பரப்பளவிலும் உள்ளன. தோட்ட நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 57,126 ஆகும். இவர்களில்

22,481 ஆண்களும் மற்றும் 34,645 பெண்களும் உள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான நல வசதிகளை உறுதி செய்வதற்காக, 2023–2024 ஆம் நிதியாண்டில் 1,955 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 51 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. 60 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் முடிக்கப்பட்டு ரூ.3,79,000/– அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

1951–ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நல வசதிகள் பின்வருமாறு:

இச்சட்டம், தோட்டத் தொழிலாளர்களின் பயன்பாட்டிற்கு வேலையளிப்போரால் வீடுகளை இலவசமாக கட்டித்தர வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை மொத்தம் 40,770 வீடுகள் கட்டித்

தரப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு காப்பகம், கல்வி வசதிகள், தோட்டத் தொழிலாளர்களுக்கு உணவகம், குடிநீர், குளிர்கால பாதுகாப்பு ஆடைகள், மருத்துவ வசதிகள் போன்ற வசதிகள் வேலையளிப்போரால் வழங்கப்பட வேண்டும். 2023–2024 ஆம் நிதியாண்டில் 27 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளது மற்றும் 14 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.84,000/– அபராதமாக வசூலிக்கப்பட்டது.

### 1.3.2.5. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1966

இச்சட்டம் பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்து அவர்களது பணிநிலைமையினை முறைப்படுத்துகிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் 1,456 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 31 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தில்

வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.8,500/- அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.2.6. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955

செய்தித்தாள் நிறுவனங்களில் பணிபுரியும் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பணியாளர்களின் பணி நிபந்தனைகளை இந்த சட்டம் ஒழுங்குபடுத்துகிறது. மேலும், உழைக்கும் பத்திரிக்கையாளர்கள், பத்திரிக்கையாளர் அல்லாத பிற பணியாளர்கள் மற்றும் செய்தித்தாள்/ செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்ய ஊதிய குழுக்களை அமைக்க வழிவகை செய்கிறது. 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகள் 11.11.2011 முதல் நடைமுறையில் உள்ளது. மாநிலத்தில் உள்ள

72 பத்திரிக்கை நிறுவனங்களில், அனைத்து நிறுவனங்களும் 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தியுள்ளன.

### 1.3.2.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாள்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2023–2024 ஆம் நிதியாண்டில் 17,685 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 5,651 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வு வழியாக ரூ.33,56,250/– வசூலிக்கப்பட்டுள்ளது, 12 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டு வேலையளிப்பவர்களுக்கு பல்வேறு

முரண்பாடுகளுக்காக ரூ.10,000/- அபராதம் விதிக்கப்பட்டது.

### 1.3.2.8. ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

20 அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை பணியமர்த்தும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும், ஒப்பந்ததாரருக்கும் இந்த சட்டம் பொருந்தும். இச்சட்டம் ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிலைமையினை ஒழுங்குபடுத்தவும் சில சூழ்நிலைகளில் ஒப்பந்த தொழிலாளர் முறையினை நீக்குவதற்கும் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் நிதியாண்டில் முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 471 பதிவுச்சான்றிதழ்களும் 317 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.2.9. மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979

இச்சட்டமானது, மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதையும் அவர்களது பணிநிபந்தனைகளையும் முறைப்படுத்துகிறது.

மாநிலங்களுக்கிடையே புலம்பெயர்ந்த 5 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணியமர்த்தும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும், ஒப்பந்ததாரருக்கும் இந்த சட்டம் பொருந்தும்.

2023–2024 ஆம் நிதியாண்டில் முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 28 பதிவுச்சான்றிதழ்களும் 21 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.3. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறைப்படுத்துதல்

குழந்தைத் தொழிலாளர் என்பது நமது சமூகத்தின் சிக்கலான சமூகப் பொருளாதார கட்டமைப்பில் அதன் வேர்களைக் கொண்ட ஒரு சமூகத் தீமையாகும். தமிழ்நாடு அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல், வளரிளம் பருவ தொழிலாளர்களை அபாயகரமற்ற தொழில்களில் பணி முறைப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய இலக்காக கொண்டுள்ளது. 1986ம் ஆண்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதை தடை செய்யும் பிற தொடர்புடைய சட்டங்களை மாநில அளவில் தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்கள்

மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அமலாக்க அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது.

2023–2024 ஆம் நிதியாண்டில் ஆய்வுகள் மற்றும் சிறப்பாய்வுகள் 44,051 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 268 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 65 குழந்தை தொழிலாளர்கள், 274 வளரிளம் பருவத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 57 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 103 வழக்குகளில் (முந்தைய ஆண்டு நிலுவையும் சேர்த்து) ரூ.19,42,500/– அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு உருவாக்குதல்**

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை

ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12–ம் நாள் "உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்" ஆக கடைபிடிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல், ஊர்வலங்கள், மனிதசங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 12.06.2024 அன்று நடைபெற்றது.

### 1.3.4. கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல்

இந்த சமூகத் தீமையை எதிர்த்து, அரசு பல திட்டங்களை செயல்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசு

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, அவர்களின் வாழ்வாதாரம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் கல்வி ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகிறது.

**மீட்பு மற்றும் விடுவித்தல்**

கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பான புகார்கள் பெறப்பட்டவுடன், கொத்தடிமைகள் கண்டறியப்பட்டால், அவர்கள் உடனடியாக மீட்கப்படுவார்கள், வருவாய் கோட்ட அலுவலர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், காவல் துறை, சுகாதாரத் துறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் இணைந்து புகார் குறித்து முதல்கட்ட விசாரணை நடத்தி, புகாரின்

உண்மைத்தன்மையைக் கண்டறிய வேண்டும். மீட்கப்பட்ட ஒவ்வொரு கொத்தடிமைத் தொழிலாளிக்கும் 24 மணி நேரத்திற்குள் விடுதலைச் சான்றிதழை சம்பந்தப்பட்ட வருவாய் துறை அதிகாரிகள் வழங்குவார்கள். விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக இருந்தால், அவர்கள் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

**மறுவாழ்வு அளித்தல்**

38 மாவட்டங்களின் தேவைக்கேற்ப கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக நிரந்தர நிதி மூலதனம் ஏற்படுத்த அரசானது ரூ.133.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு

அளிக்கும் பொருட்டு உடனடி நிவாரண தொகையாக ரூ.30,000/– வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு நல உதவி திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆண் தொழிலாளர்களுக்கு ரூ.1.00 இலட்சம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.2.00 இலட்சம் மற்றும் இதர சிறப்பு பிரிவு தொழிலாளர்களுக்கு ரூ.3.00 இலட்சம் தொகையும் நீதிமன்றத்தால் கொத்தடிமை முறை உறுதி செய்யப்பட்ட பின்பு நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

2023–2024 ஆம் நிதியாண்டில், 196 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். 203 மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு (முந்தைய ஆண்டு மீட்கப்பட்டவர்களுக்கும் சேர்த்து) உடனடி நிவாரணத் தொகையாக ரூ.58,80,000/– வழங்கப்பட்டுள்ளது.

**பயிற்சி பட்டறை – வடசென்னை**

சமீப காலங்களில் வடசென்னையில் குழந்தை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் அதிகளவில் கண்டறியப்பட்டு வருவதால், குழந்தை / கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு வழங்குவதில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த பயிற்சி பட்டறை தென்னிந்திய வர்த்தக சபையில் 05.09.2023 அன்று நடத்தப்பட்டது. மேற்படி விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறையில் குழந்தை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்களை வீட்டு வேலைகள்

**மற்றும் அவர்களது கடைகள் / நிறுவனங்களில் ஈடுபடுத்த மாட்டோம் என்ற உறுதி மொழி படிவங்களில் வேலையளிப்போர் சங்கங்கள் கையெழுத்திட்டன.**

**பயிற்சிகள்**

தொழிலாளர் துறை மற்றும் தொடர்புடைய பிறதுறை அலுவலர்களுக்கு அண்ணா பணியாளர் கல்லூரியில் பயிற்சி வழங்கிட அரசால் ரூ.5.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நவம்பர் மற்றும் டிசம்பர் 2023 மாதங்களில் நடைபெற்ற பயிற்சியில் தொழிலாளர் துறை மற்றும் பிற துறையைச் சார்ந்த 124 அமலாக்க அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

**குறும்படம் வெளியிடுதல்**

**கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடையே**

ஏற்படுத்திடும் பொருட்டு, குறும்படம் எடுப்பதற்கு அரசால் ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி குறும்படம் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 15.12.2023 அன்று வெளியிடப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் திரையிடப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்:**

அனைத்து மாவட்டங்களிலும் கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக மாநில அரசு ரூ.3.80 லட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மாவட்ட அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

09.02.2024 அன்று அனுசரிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தின் போது, துண்டு பிரசுரங்கள் விநியோகம், பொது இடங்களில் பதாகைகளை காட்சிபடுத்துதல், கையெழுத்து இயக்கம், வீதி நாடகம், பொது இடங்கள், பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பு தின நிகழ்ச்சி 09.02.2024 அன்று சென்னை, தியாகராய நகரில் நடத்தப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறை, வருவாய் துறை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மற்றும் தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. குறு நாடகம் நடத்தப்பட்டது. மேலும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தொடர்பான குறும்படம் திரையிடப்பட்டது.

### 1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள்

#### 1.3.5.1 . சட்டமுறை எடையளவுகள் சட்டம் 2009

எடைகள் மற்றும் அளவீடுகளின் தரங்களை அமல்படுத்தவும், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. மாநிலத்தில் 434 சட்டமுறை எடையளவுகள் அலுவலர்கள் உள்ளனர். அவர்கள் எடை மற்றும் அளவிடும் கருவிகளை ஆய்வு செய்து, சரிபார்த்து

முத்திரையிட்டு சரிபார்ப்பு சான்றிதழ்களை வழங்குகிறார்கள்.

2023–2024 ஆம் நிதியாண்டில், 48,892 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 8,364 முரண்பாடுகள் காணப்பட்டு இசைவு தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.89.07 இலட்சமும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ.75,000/–ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் நிதியாண்டில், 814 எடையளவு தயாரிப்பாளர் / விற்பனையாளர் / பழுதுபார்ப்பவர் உரிமங்கள் / புதுப்பித்தல்கள் வழங்கப்பட்டு, உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.35.08 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**இணையவழி முத்திரைப்பணி**

பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் நலனை பாதுகாக்கும் பொருட்டு, வணிகர்கள் எடையளவுகளை பரிசீலனை செய்து சான்று பெறும் நடைமுறையை எளிதாக்கும் வகையில் இணைய வழியில் முத்திரையிடும் பணி 23.02.2022 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2023–2024 ஆம் நிதியாண்டில், 3,88,164 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, முத்திரைக்கட்டணமாக ரூ.64.75 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.3.5.2. சட்டமுறை எடையளவுகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011**

இவ்விதிகளின்படி பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், பொட்டலமிடுபவர் மற்றும் இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின் மீது உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி,

பொட்டலப் பொருட்களின் பொது அல்லது மரபுப் பெயர், நிகர எடை, பொட்டலமிடப்பட்ட மாதம் மற்றும் வருடம், அதிகபட்ச சில்லறை விற்பனை விலை உள்ளிட்ட விவரங்களை பொட்டலப் பொருட்களின் மீது அறிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, இவ்விதிகளின் கீழ் பொட்டலமிடுவதற்காக பதிவுச்சான்று பெற வேண்டும்.

2023-2024 ஆம் நிதியாண்டில், 14,727 நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு 1,522 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இணக்கக் கட்டணத் தொகையாக ரூ.93.24 இலட்சமும், நீதிமன்ற அபராதத் தொகையாக ரூ.1,05,000/- விதிக்கப்பட்டது. மேலும், 847 பொட்டலமிடுபவர் / இறக்குமதியாளர் பதிவுச்சான்று வழங்கப்பட்டு, பதிவுக்கட்டணமாக ரூ.6.01 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.6. சமூக பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள்

அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை இச்சட்டங்கள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. பணிக்கொடை வழங்குதல், பிழைப்பூதியம் வழங்குதல், நிரந்தரத் தகுதி வழங்குதல், பெண் தொழிலாளர்களுக்கு பேறுகாலச் சலுகைகள் வழங்குதல், விபத்தின் காரணமாக பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குதல் ஆகியவை சமூக பாதுகாப்பு சட்டங்களின் கீழ் உறுதி செய்யப்படுகிறது.

#### 1.3.6.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

1923–ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீட்டுச் சட்டமானது பணியின்போது பணியின் காரணமாக ஏற்படும் விபத்தின் காரணமாக நிகழும் இயலாமை

அல்லது மரணத்திற்காக பணியாளர்களுக்கோ அல்லது அவர்களை சார்ந்தவர்களுக்கோ இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது. சிவில் சட்ட நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில் இழப்பீடு தொடர்பான தகராறுகளை விரைவாக முடிக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை விசாரித்து உத்தரவு பிறப்பிக்கும் பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்கள் / காப்பீட்டு நிறுவனங்களால், பணியாளர் இழப்பீட்டு ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில், 2,206 வழக்குகள் முடிக்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.88,33,21,419/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.3.6.2. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972

இச்சட்டத்தின் கீழ், ஒரு தொழிலாளர் 5 ஆண்டுகள் தொடர் பணி செய்திருந்தால், தமது வயது முதிர்வு, பணி ஓய்வு, விருப்ப ஓய்வு, இறப்பு, விபத்து அல்லது நோய் காரணமாக இயலாமை ஏற்படுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடையை பெற தகுதியுடையவர் ஆவார். இருப்பினும், மரணம் அல்லது இயலாமை காரணமாக பணிமுடிவு ஏற்பட்டால், 5 ஆண்டுகள் தொடர்ச்சியான பணி முடித்திருக்க வேண்டிய கட்டாயமில்லை. ஒரு பணியாளருக்கு அதிகபட்சமாக பணிக்கொடை தொகை ரூ.20 லட்சம் வரை வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ், மண்டல தொழிலாளர் இணை ஆணையர்களின் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர்கள், கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர்

ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2023–2024 ஆம் நிதியாண்டில், 2,280 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு பணிக்கொடை தொகையாக ரூ.18,99,67,650/– மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது மற்றும் 245 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது.

### 1.3.6.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

இச்சட்டத்தின் கீழ் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள ஒரு பணியாளருக்கு, அத்தகைய தற்காலிக பணிநீக்க காலத்தில் வேலையளிப்போரிடமிருந்து பிழைப்பூதியம் பெற உரிமை உண்டு.

இச்சட்டத்தின் கீழ் மண்டல தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை

ஆணையர்கள் கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2023-2024 ஆம் நிதியாண்டில், 218 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, பிழைப்பூதியமாக மொத்தம் ரூ.1,09,22,048/- வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 17 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளன.

**1.3.6.4. மகப்பேறு நலச் சட்டம், 1961**

இச்சட்டம் பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி பாதுகாப்பு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு மற்றும் சில மகப்பேறு பலன்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்தி உறுதி செய்கிறது. இச்சட்டம் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட

பணியாளர்களை பணியமர்த்தும் நிறுவனங்களுக்கு பொருந்தும். பெண் பணியாளர்களுக்கு 26 வாரங்களுக்கு மகப்பேறு விடுமுறை அளிக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது (பிரசவத்திற்கு முன் 8 வாரங்கள் மற்றும் பிரசவத்திற்குப் பின் 18 வாரங்கள்). இச்சட்டத்தின்படி ஒரு பெண் பணியாளர், குழந்தை பிறப்பு எதிர்பார்க்கப்படும் தேதிக்கு முந்தைய கடந்த 12 மாதங்களில் குறைந்தது 80 நாட்களாவது அந்நிறுவனத்தில் பணிபுரிந்து இருக்க வேண்டும். ஒரு பெண் தொழிலாளர் 3 மாதங்களுக்குக் குறைவான வயதுடைய குழந்தையைத் தத்தெடுக்கும்போது, அவர் 12 வாரங்களுக்கு மகப்பேறு விடுப்புக்கு தகுதியுடையவராவார்.

2023-2024 ஆம் நிதியாண்டில், 8,531 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 4 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு

வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.1,000/- அபராதம் விதிக்கப்பட்டது.

**1.3.6.5. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம் ஒரு தொழில் நிறுவனத்தில் 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர்பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வலியுறுத்துகிறது. தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்டங்கள்) ஆகியோர் இச்சட்டத்தின் கீழ் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2023-2024 ஆம் நிதியாண்டில், 76 பணிநிரந்தரம் கோரும் கேட்பு மனுக்கள்

முடிக்கப்பட்டு 395 நபர்களுக்கு பணி நிரந்தர உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளது.

### 1.4. சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

### 1.4.1.அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982**

கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் போன்ற சமூக பாதுகாப்பு திட்டங்களை பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்க சட்டம் இயற்றுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு, அமைப்புசாரா

தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியங்களில் 71 தொழில் இனங்களிலும், கட்டுமான வாரியத்தில் 54 தொழில் இனங்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் பின்வரும் 20 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது.**

| வ.எண். | வாரியங்கள் பெயர் |
|---|---|
| 1 | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2 | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ.எண். | வாரியங்கள் பெயர் |
|---|---|
| 4 | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5 | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6 | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7 | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8 | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9 | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10 | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11 | தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் |
| 12 | தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் |
| 13 | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14 | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15 | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம் |
| 16 | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ.எண். | வாரியங்கள் பெயர் |
|---|---|
| 17 | தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 18 | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் |
| 19 | தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 20 | தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (Gig) தொழிலாளர்கள் நல வாரியம் |

## <u>வாரியங்களின் செயல்பாடுகள்</u>

அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனிற்காக வழங்கப்படும் நலதிட்ட உதவிகள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாட்டின் காரணமாக அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களது பணி பாதிப்படையாத வண்ணம் அவர்களது குடியிருப்பிற்கு அருகில் உள்ள இணையதள சேவை

மையங்களில் பதிவு, புதுப்பித்தல் மற்றும் கேட்பு ஆகியவற்றிற்கான மனுக்களை விண்ணப்பிக்க எளிய முறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் மாவட்ட கண்காணிப்புக் குழு கூட்டங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குவது கண்காணிக்கப்பட்டு வருகிறது. நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை கடைப்பிடிக்கப்பட்டு அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும் அமைப்புசாரா தொழிலாளர்கள் / பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் நேரடியாக செலுத்தப்படுகிறது.

**அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் பதிவு முன்னேற்றம்**

07.05.2021 முதல் 31.03.2024 வரையிலான காலங்களில் 11,04,725 கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் 4,94,386 அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

**நலத்திட்ட உதவிகள்**

07.05.2021 முதல் 31.03.2024 வரையிலான காலத்தில் 18,46,945 பயனாளிகளுக்கு ரூ.1,529,99,67,291/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## நலத்திட்ட உதவிகள் விவரம்:

அமைப்புச்சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் & இதர வாரியங்கள் தொகை (ரூ.) | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) |
| 1 | தனிநபர் விபத்து நிவாரணம் | | | |
| | அ) விபத்து மரணம் | 2,00,000/– | 1,25,000/– 2,00,000/– (பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்–களுக்கு மட்டும்) | 2,00,000/– |
| | ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000/– வரை | 1,00,000/– வரை | 1,00,000/– வரை |
| | இ) பணியிடத்தில் விபத்து மரணம் | 5,00,000/– | === | === |

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும் இறப்பு (பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) (பணியின் நிமித்தமாக) | | | |
| 2 | இயற்கை மரண உதவி | 50,000/- | 30,000/- | 50,000/- |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 5,000/- | 5,000/- | 5,000/- |
| 4 | திருமண உதவித்தொகை - ஆண் / பெண் | 20,000/- | பெண் 5,000/- ஆண் 3,000/- | பெண் 5,000/- ஆண் 3,000/- |
| 5 | மகப்பேறு உதவித்தொகை | 18,000/- | 6,000/- | 18,000/- |
| | மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு / கருச்சிதைவு | 3,000/- | 3,000/- | 3,000/- |
| 6 | கல்வி உதவித் தொகை: | | | |
| | i) 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு படிப்பதற்கு | 1,000/- | 1,000/ | 1,000/- |
| | ii) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு | 2,400/- | 1,000/ | 1,000/- |

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | மட்டும்) | | | |
| | iii) 10ம் வகுப்பு தேர்ச்சி | 2,400/- | 1,000/ | 1,000/- |
| | iv) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 3,000/- | 1,000/ | 1,000/ |
| | v)12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 3,000/- | 1,500/ | 1,500/ |
| | vi) 12ம் வகுப்பு தேர்ச்சி | 3,000/- | 1,500/ | 1,500/ |
| | vii) முறையான பட்டப்படிப்பு | 4,000/- | 1,500/- | 4,000/- |
| | முறையான பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/- | 1,750/- | 4,000/- |
| | viii)முறையான பட்டமேற்படிப்பு | 4,000/- | 4,000/- | 4,000/- |
| | முறையான பட்டமேற்படிப்பு விடுதியில் தங்கிப்படித்தால் | 5,000/- | 5,000/- | 5,000/- |
| | ix) தொழில் நுட்பப் பட்டப்படிப்பு | 4,000/- | 4,000/- | 4,000/- |
| | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/- | 6,000/- | 6,000/- |

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | x) தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு | 6,000/- | 6,000/- | 6,000/- |
| | தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப்படித்தால் | 8,000/- | 8,000/- | 8,000/- |
| | xi) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 3,000/- | 1,000/- | 3,000/- |
| | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு விடுதியில் தங்கிப் படித்தால் | 3,000/- | 1,200/- | 3,000/- |
| | ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், எம்.பி.பி.எஸ் படிப்பு. | கல்விக் கட்டணம், தங்கும் விடுதி முழுக்கட்டணம் மற்றும் வாழ்க்கை செலவிற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.50,000/- | === | === |
| 7 | கண்கண்ணாடி வாங்கிட உதவித்தொகை | 750/- வரை | 750/- வரை | 750/- வரை |
| 8 | அ) ஓய்வூதியம்/ முடக்க ஓய்வூதியம் | 1200/- பிரதி மாதம் | 1200/- பிரதி மாதம் | 1200/- பிரதி மாதம் |
| 9 | குடும்ப ஓய்வூதியம். | 500/- பிரதி மாதம் | --- | --- |

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| 10 | வீட்டு வசதி திட்டம் | 4,00,000/- வரை | --- | --- |
| 11 | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிர் இழக்க நேரிட்டால் அவர்களின் உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து உதவித்தொகை | 1,00,000/- வரை | ---- | ---- |
| 12 | தீவிர நோய் பாதிப்பு நலத்திட்ட உதவித்தொகை (இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை, டயாலிசிஸ், புற்றுநோய், ஆஸ்துமா, சிலிக்கோசிஸ் மற்றும் பக்கவாதம்) | ஆண்டொன்றுக்கு ரூ.12,000/- (3 ஆண்டுகளுக்கு) | --- | --- |
| 13 | ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ | --- | --- | 1,00,000/- (நபர் ஒருவருக்கு) |

| வ. எண் | நலத்திட்ட விவரம் | தற்போது வழங்கப்படும் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | வாங்குவதற்கென மானியம் வழங்கும் திட்டம் மேலும் 500 மகளிர் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும். மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் | | | |

**நிதி ஆதாரங்கள்:**

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தால், கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் ஒரு சதவிகிதம் பங்களிப்பு தொகையாக பெறப்படுகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில் (01.04.2023 முதல் 31.03.2024 வரை) ரூ.994.98 கோடி பங்களிப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கான நிதிக்காக, பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாக ஏற்றிச் செல்லும் மோட்டார் வாகனதாரர்களிடமிருந்து தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம் 1974–ன் படி 1% கூடுதல் வரி, போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புத் துறையினால் வசூலிக்கப்படுகிறது. அத்துறையால் 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.24.35 கோடி இவ்வாரிய நிதிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்களுக்கு தமிழ்நாடு அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசால்

2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.295.59 கோடி இவ்வாரியங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**அமைப்புசாரா வாரியங்களின் சாதனை விவரங்கள்**

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் துவங்கப்பட்ட நாள் முதல் 31.03.2024 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவித் தொகை விவரங்கள்

| வ. எண் | வாரியங்கள் | பதிவு (இலட்சம்) | பயனாளிகள் (இலட்சம்) | தொகை ரூ (கோடி) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 23.91 | 30.22 | 1760.11 |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் | 18.25 | 39.84 | 1666.74 |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 1.83 | 2.04 | 97.55 |
| | **மொத்தம்** | **43.99** | **72.10** | **3524.40** |

## 2023-2024 ஆம் நிதியாண்டில் பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவித் தொகை விவரங்கள்

| வ.எண். | வாரியங்கள் | பதிவு (இலட்சம்) | பயனாளிகள் (இலட்சம்) | தொகை ரூ (கோடி) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 1.98 | 4.99 | 416.03 |
| 2 | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் | 0.73 | 2.55 | 276.74 |
| 3 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 0.15 | 0.27 | 22.19 |
| | மொத்தம் | **2.86** | **7.81** | **714.969** |

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 3,66,375 ஓய்வூதியதாரர்கள் மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுகின்றனர்.

## 1.4.2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நிதிச் சட்டம், 1972–ன் கீழ் அமைப்பு சார்ந்த துறையில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கும் பொருட்டு நிதியை உருவாக்குவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியமானது 1975 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்தும், வேலையளிப்பவரிடமிருந்தும் பெறப்படும் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையின்

மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டொன்றுக்கு ரூ.20/−ம், வேலையளிப்பவர் ஒரு தொழிலாளிக்கு ரூ.40/−வீதமும், அரசு ஒரு தொழிலாளிக்கு ரூ.20/− என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி பெறப்பட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் நிறுவனங்களிடம் உள்ள கொடுபடாத் தொகை, தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர் மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

கீழ்க்கண்ட நலத் திட்டங்களுக்காக தொழிலாளர் நல நிதி செலவிடப்படுகிறது.

- ❖ திருமண உதவித் தொகை
- ❖ கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி ஊக்கத் தொகை
- ❖ பாடநூல் உதவித்தொகை
- ❖ அடிப்படை கணினி பயிற்சி உதவித் தொகை
- ❖ தையல் இயந்திரம் வாங்க உதவித் தொகை
- ❖ மூக்குக் கண்ணாடி உதவித் தொகை
- ❖ 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விலையில்லா மாதிரி வினாத்தாள் கையேடு
- ❖ நுழைவுத் தேர்வுக்கான உதவித் தொகை
- ❖ மாவட்ட அளவிலான விளையாட்டு உதவித் தொகை
- ❖ மாநில அளவிலான விளையாட்டு உதவித் தொகை

- ❖ இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை.
- ❖ விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை.

தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் தங்கி ஓய்வெடுக்க மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டடப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக "ஜீவா இல்லம்" சென்னையில் கட்டடப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் படித்து பயன்பெறும் வகையில் முக்கிய நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

## 2023–2024 ஆம் நிதியாண்டு முடிய பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தொகை விவரம்

| வ. எண் | திட்டங்கள் | பயனாளிகள் | தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கல்வி உதவித் தொகை | 2036 | 48.90 |
| 2. | பாடநூல் உதவித் தொகை | 43 | 0.84 |
| 3. | திருமண உதவித்தொகை | 1794 | 280.95 |
| 4. | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | 342 | 3.20 |
| 5. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | 243 | 90.15 |
| 6. | விபத்து மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | 90 | 126.50 |
| 7. | உழைப்பவர் உலகம் மாத இதழ் | 4100 (மாதந்தோறும்) | 8.05 |
| மொத்தம் | | 8648 | 558.59 |

### 1.5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு

செய்யப்பட்டு, 1988-லிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையம் சென்னை அம்பத்தூரில் செயல்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையத்தின் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளம், மின் கட்டணம், வாகன செலவினம் போன்ற முக்கிய செலவுகளுக்காக 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான மானியமாக ரூ.4,79,38,000/- தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

இக்கல்வி நிலையம் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார

இயக்குநரக ஆய்வாளர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்திவருகிறது.

மேலும், இக்கல்வி நிலையம் புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகள் / பயிற்சிகளை நடத்தி வருகிறது.

**கல்விப் பணிகள்**

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையியலில் இளங்கலை பட்டப்படிப்பு பி.ஏ. – (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப்படிப்பு எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) ஆகியவற்றை நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் 2001 முதல் முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பிஎச்.டி.) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி

நிலையம் ஓராண்டு பகுதி நேர (மாலை) "தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு" (பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு (பகுதி நேர – வார இறுதி நாட்கள் – சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டயப் படிப்பு பணி புரிவோருக்காக நடத்தி வருகிறது.

**வேலைவாய்ப்பு**

இக்கல்வி நிலையத்தின் மூலம் போதிய வேலை வாய்ப்புகளை தேடித்தரும் பொருட்டு "நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ" என்ற பணியமர்வு வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்கான வளாகத் தேர்வு மற்றும் பணியில் அமர்த்துதல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது.

## 1.6. தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "தமிழ்நாடு கட்டுமானக் கழகம்" என்ற பயிற்சி நிலையம், தையூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானக் கழகமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும் மையமாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மூன்று நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (TAC), தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) மற்றும் கட்டுமானத் தொழில் வளர்ச்சி குழுமத்துடன் (CIDC) இணைந்து 07.05.2021 முதல் 06.10.2023 முடிய 1,679 தொழிலாளர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மூன்று நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சியில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தினசரி ரூ.500/- வேலை இழப்பீட்டு தொகையாக வழங்கப்படுகிறது.

ரூ.5.86 கோடி செலவில் திறன் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆண்டுதோறும் 5000 பதிவுபெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் வழங்கப்படுகிறது. 15.12.2023 அன்று துவக்கி வைக்கப்பட்ட இப்பயிற்சியில் 31.03.2024 வரை 159 கட்டுமானத் தொழிலாளர்கள் 7 நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றனர். இப்பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பீட்டு தொகையாக தினசரி ரூ.800/- வழங்கப்படுகிறது.

## 1.7. தொழில் நடத்துவதில் எளிய முறை

"தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை" என்பதை செயல்படுத்திட, பதிவு / உரிமம் / புதுப்பித்தல் / திருத்தம் / மாற்றம் / மூடுதல் ஆகிய வசதிகளையும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றையும் தொழிலாளர் துறையின் வலைத்தளமான "https://labour.tn.gov.in"–ல் இத்துறை தொகுத்து வழங்குகிறது. மேலும், இவை மின்னணு மூலம் கட்டணம் செலுத்துதல் / சான்றிதழ்கள் / உரிமங்கள் பதிவிறக்கம் செய்தல் ஆகிய வசதிகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

தகவல் தொழில்நுட்ப சட்டம், 2011–ன் படி தமிழ்நாடு அரசு, 14.12.2016 அன்று தொழிலாளர் துறைக்கான 41 மின்னணு சேவைகளை அரசிதழில்

வெளியிட்டது. இந்த 41 சேவைகளில், 37 சேவைகள் இணைய வழியாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 சேவைகள் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

**இணையம் மூலம் தாக்கல் செய்யப்படும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பல ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதை தவிர்த்திடவும் சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையிலும் காகிதமற்ற முறையில் வலைத்தளம் மூலம் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யும் முறை பின்வரும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959

- ❖ தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955
- ❖ தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965
- ❖ தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் 1968.

**ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களை பராமரிக்கும் சிரமத்தினை குறைத்திடும் வகையில், எளிமையான ஒருங்கிணைந்த பதிவேடுகள் முறை பின்வரும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959
- ❖ தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965

- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968
- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாட்டில் உள்ள வலுவான உட்கட்டமைப்பு வசதிகள், சுமுக தொழில்சார் சூழ்நிலை மற்றும் திறன்வாய்ந்த தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் கிடைக்கப்பெறுவதன் காரணமாக, மிகுந்த வளர்ச்சி அடைந்த தொழில் சார் உற்பத்தி சூழல் அமைந்துள்ளது. முன்னணி வாகன உற்பத்தி மற்றும் மின்னணு உற்பத்தி நிறுவனங்களின் கணிசமான தொடர் முதலீடுகளால் இம்மாநிலம் நாட்டிலேயே வாகன உற்பத்தி மற்றும் மின்னணு உற்பத்தி தொழிலில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

31.03.2024 அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டம், 1948 இன் கீழ் தமிழ்நாட்டில் 51,026 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு அவற்றில் 25,55,196 தொழிலாளர்கள்

பணிபுரிகின்றனர். 2023–2024 நிதி ஆண்டில் மட்டும் இச்சட்டத்தின் கீழ் 2,528 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 63,368 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

### 2.1. நிர்வாக அமைப்பு

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், இயக்குநர் தலைமையில், தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு மற்றும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளுடன் செயல்படுகிறது.

#### 2.1.1. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு

இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள், 32 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்கள்,

ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் உள்ளிட்ட அலுவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

### 2.1.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு

இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 2 இணை இயக்குநர்கள், 8 துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்கள் ஆகிய அலுவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

## 2.2. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்

காக்கப்படுவதை உறுதி செய்வதுடன் கீழ்கண்ட பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

(I) தொழிற்சாலைகள் சட்டம், 1948 & தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்.

(II) தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்.

### 2.2.1. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

தொழிற்சாலைகளில் இடர் அளவீட்டின் அடிப்படையில் காலமுறை ஆய்வு மேற்கொண்டு தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களில்

வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்வதை இவ்வியக்ககம் முதன்மை பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் தொழிற்சாலைகளில் கீழ்கண்ட தொழிலாளர் நலச்சட்டங்கள் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950
2. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.
3. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல்

மற்றும் பணிநிலைமைகள்) சட்டம் 1979, மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.

4. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.
5. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.
6. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.
7. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.
8. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958 மற்றும் விதிகள், 1959.

9. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.

10. சம ஊதியச்சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.

11. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981.

12. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம், 1972, மற்றும் விதிகள், 1973.

13. தொழிலாளர் நலச்சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988.

14. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972 மற்றும் தமிழ்நாடு விதிகள் 1973.

15. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள் 1975.
16. உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், 1989.
17. தமிழ்நாடு தொழிலக பெரும்விபத்து ஆபத்துகளை கட்டுப்படுத்தும் விதிகள், 1994.

### 2.2.2. தொழில் முனைவோருக்கு வணிகம் புரிதலை எளிதாக்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழிற்சாலைகளின் இடர் அளவீடு வகைப்பாட்டின் அடிப்படையில் கணினி மூலமாக தெரிவு செய்து ஆய்வு மேற்கொள்ளும் நடைமுறை 2017–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் முனைவோருக்கு எளிதாக வணிகம் புரியும் வசதிகளை (Ease of Doing Business) வழங்கும் பொருட்டு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான ஒப்புதல்களை இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை https://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் உரிமம் வழங்குதல்

- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் உரிமம் புதுப்பித்தல்
- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் உரிமம் வழங்குதல்.
- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979 –ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.

- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979 –ன் கீழ் உரிமம் வழங்குதல்.

- ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்தல்.

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் புதுப்பிக்கப்படும் உரிமங்களை இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக, உரிய கட்டணம் செலுத்திய பின்னர் புதுப்பிக்கப்பட்ட உரிமங்களை நிர்வாகத்தினர் தானாகவே பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.3. ஆய்வு முறை

ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக "இடர் அளவீட்டின்

அடிப்படையில் கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள்", ஆய்வு அலுவலர்கள் ஒதுக்கீடு செய்தல் போன்ற சீர்திருத்தங்கள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் ஆய்வு முறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆய்வு முறைகளில் பின்வரும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை/கட்டடம் அல்லது இதர கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்தை

இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த 24 மணி நேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.1. அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 87 மற்றும் விதி 95ன் கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 2 (cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் "அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளன.

### 2.3.2. நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 87 மற்றும் விதி 95–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட

தொழிற்சாலைகள் (பிரிவு 2 (cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் 250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை அல்லாத தொழிற்சாலைகள் "நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளன.

### 2.3.3. குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்

250க்கும் குறைவான தொழிலாளர்கள் பணிபுரியும் அனைத்து அபாயகரமான தொழில்முறை (பிரிவு 87 மற்றும் விதி 95ன் கீழ் வகைப்படுத்தப்பட்டவை) அல்லாத மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை (பிரிவு 2 (cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) அல்லாத தொழிற்சாலைகள் "குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

2023–2024–ஆம் நிதி ஆண்டில் தொழிற்சாலைகளில், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் 10,650 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

## 2.3.4. "சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்"

### (i) சுயசான்றிதழ் திட்டம்

குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், 250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

**(ii) எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாகவும், நடைமுறைகளை எளிமையாக்கவும், துரிதமாக்கவும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950–ன் விதி 100ன் படி தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண்.22ல் சமர்ப்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழான பல்வேறு விவரங்கள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

## 2.4. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், இறுதியாக தயாரிக்கப்படும் பட்டாசுகள் ஆகியவை மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்து விடும். எனவே, பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைதோறும் ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது. 2023–2024–ஆம் நிதி ஆண்டில் விதிமீறல்கள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை

நிர்வாகத்தினருக்கு எதிராக 642 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.93,15,500/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைசார் அலுவலர்களை கொண்ட குழுவால் பாதுகாப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளும், ஆய்வு குழுக்களும் கடைபிடிக்கப்பட வேண்டிய நிலையான இயக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**2.4.1. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான ஆய்வு முறையில் திருத்தம்:**

பட்டாசு தயாரிப்பில் உள்ள அபாயகரமான தன்மையை கருத்தில் கொண்டும், இதர

தொழிற்சலைகளில் ஏற்பட்ட மொத்த விபத்துகளுடன் ஒப்பிடும்போது பட்டாசு தொழிற்சாலைகளில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வுமுறையினை அதிகரிக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொண்டு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பட்டாசு தொழிற்சாலைகளும் அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டு ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.2. பட்டாசு தொழிற்சாலைகளில் சிறப்பு குழு ஆய்வுகள்

விருதுநகர் மாவட்டத்தில், பண்டிகைக் காலங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பினை

உறுதி செய்யும் பொருட்டு மாநிலத்தின் மற்ற பகுதியிலிருக்கும் இணை இயக்குநர்களை கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இச்சிறப்பு குழு ஆய்வுகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமித்தல் மற்றும் கையாளுவது கண்காணிக்கப்படுகிறது. விதி மீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கடும் விதிமீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தி மேற்கொள்வதை தடை செய்து ஆணைகள் வழங்கப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதி ஆண்டில் தீபாவளிப் பண்டிகையையொட்டி 508 சிறப்பு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.4.3. பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் போதிய கல்வியறிவு இல்லாதவர்களாகவும், பாதுகாப்பான பணி வழிமுறைகள் மற்றும் இரசாயனங்களின் கூறுகள் பற்றி அறியாதவர்களாகவும் உள்ளதால், கடும் விபத்துக்கள் மற்றும் மரண விபத்துக்கள் அதிகளவில் நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் பிரத்தியேகமாக ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் கீழ்கண்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- ❖ இரசாயனங்களின் கூறுகள்
- ❖ இரசாயனங்களை கையாளுதல்
- ❖ இரசாயனங்கள் கலவை
- ❖ இரசாயனங்களின் வேதி வினை
- ❖ பாதுகாப்பான செயல்முறைகள்

இப்பயிற்சி மையத்தில் இதுவரை 78 குழுக்களுக்கு ஒரு மாத கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 1,568 ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர். 2023–2024–ஆம் நிதி ஆண்டில், 104 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 3,102 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் விபத்துகள் அதிக அளவில் நிகழக்கூடிய இரசாயன கலவை நிரப்புதல் மற்றும் மணி மருந்து தயாரிக்கும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 31.03.2024 அன்று உள்ளவாறு மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ள

1,130 தொழிலாளர்களுக்கு 80 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.4.4. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காலமுறைப்படி பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலை வளாகத்திலேயே நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பட்டாசு உற்பத்தியின் போது தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய முக்கிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்வியக்கக அலுவலர்களால் எடுத்துரைக்கப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு

தனித்தனியாக பாதுகாப்பு காணொளிகள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாதுகாப்பு காணொளிகளில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் விற்பனையாளர்களது பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து வசதிகளுடன் கூடிய பிரத்தியேக நடமாடும் பிரச்சார வாகனம் மூலம் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பாதுகாப்பு காணொளிகள் திரையிடப்பட்டு தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இச்செயல்பாடுகளுடன் கூடுதலாக பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை குறைத்திட தொழிலாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கும்

பொருட்டு மதுரை மண்டலத்தில் இணை இயக்குநர் (பதிவு) தலைமையில் ஒரு பாதுகாப்பு பிரச்சார குழு உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.4.5. பட்டாசு தொழிற்சாலைகளுக்காக விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள சிறப்பு முயற்சிகள்

விருதுநகர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான பாதுகாப்பு குழுவானது இதுவரை 18 கூட்டங்களை நடத்தியுள்ளது. மாவட்ட அளவிளான பாதுகாப்பு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்கும் பொருட்டு கீழ்கண்ட கூடுதல் வழிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

1. இவ்வியக்கக அலுவலர்கள், வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய அரசுத்

துறைகளை உள்ளடக்கிய சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுக்கள், தொழிற்சாலைகளில் ஆண்டு முழுவதும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

2. கிராமங்களில் சட்ட விரோதமாக பட்டாசு தயாரிக்கப்படுவதை தடுப்பதற்கு குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. அனைத்து பட்டாசு மற்றும் பேன்சி ரக பட்டாசுப் பெட்டிகளின் மீதும் "குழந்தை தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை" என்ற வாசகம், அச்சடிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

4. பல்வேறு அரசு துறைகளால் பட்டாசு தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்யப்படும் பாதுகாப்பு வரையறைகள்,

பட்டாசு உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு "PYRO" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.

5. சிவகாசியில் செயல்படும் இவ்வியக்ககத்தின் பயிற்சி மையத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு பயிற்சியானது வருவாய் துறை மற்றும் காவல் துறை அலுவலர்களுக்கும், இரசாயனங்கள் கலக்குதல் மற்றும் நிரப்புதல் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும், பட்டாசு தொழிற்சாலை வேலையளிப்பவர் / உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சியர் உரிமம் பெற்ற பட்டாசு தொழிற்சாலை

உரிமையாளர்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. உரிய அனுமதி பெறாமல் செயல்படும் பட்டாசு தொழிற்சாலைகள் சம்மந்தமான புகார்களை பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் தெரிவிக்க ஏதுவாக கட்டணமில்லா தொலைபேசி வசதி விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுகிறது.
7. பேன்சி பட்டாசு உற்பத்தி செய்ய உரிமம் இல்லாத தொழிற்சாலையின் உரிமையாளர்கள் "பேன்சி பட்டாசுகள் தயாரிக்கப்படுவதில்லை" என்ற வாசகம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

## 2.4.6. தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கையோடு கூடுதலாக 10% எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டும். தற்போது, தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.5. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம் 1948, பிரிவு 67 மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 சட்டத்தின்படி, 14 வயது நிறைவடையாத குழந்தைகள் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில் இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் வருவாய்துறை, காவல் துறை மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர்களுடன் இணைந்து தொழிற்சாலைகள் மற்றும் சிறு நிறுவனங்களில் குழந்தை

தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை கண்டறிய குழு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2023–2024–ஆம் நிதி ஆண்டில் 8,384 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 27 குழந்தை தொழிலாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதில் சட்ட விதிகளை மீறி செயல்பட்ட வேலையளிப்போர் மீது 17 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.6,45,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இடர்தரும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகளில் 35 வளரிளம் பருவ தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட வேலையளிப்போர் மீது 11 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.8,85,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## 2.6. இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளில், அவற்றை சேமித்து வைக்கும் / கையாளும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் இருப்பின், அத்தொழிற்சாலைகள் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம், 1987) பிரிவு 2(cb)ன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம், 1987)–ன் பிரிவு 2(cb)ன் கீழ் முதல்

அட்டவணையில் 29 செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

### 2.6.1. பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், 1989–ன் அட்டவணை–3ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச அளவுக்கு மேல் இரசாயனங்களை சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள், பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 31.03.2024 அன்றைய நிலையில் தமிழ்நாட்டில் 177 தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, தொழிலக பாதுகாப்பு மற்றும்

சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் (Mock drill) காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2023–2024–ஆம் நிதி ஆண்டில் 148 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.6.2. மனை மதிப்பீட்டு குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு முன்னரோ அல்லது விரிவாக்கம் செய்வதற்கு முன்னரோ அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்கிட, தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் (திருத்தப்பட்ட சட்டம், 1987) பிரிவு 41A–ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக் குழு' ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு

செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயக்குவதற்கான வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது. 2023-2024-ஆம் நிதி ஆண்டில் இக்குழுவால் 21 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

## 2.7. தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### 2.7.1. உடல் நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி அறுவை சிசிச்சை மருத்துவர்களுடன் மருத்துவ பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும்

தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவத் தொழிலாளர்களுக்கு மருத்துவ அலுவலர்களால் மருத்துவ தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் ஆய்வுக் குழுவுடன் மருத்துவ அலுவலர்கள் செல்கின்றனர்.

2023–2024–ஆம் நிதி ஆண்டில் மருத்துவ அலுவலர்கள் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 1,60,933 தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் 19,694 தொழிலாளர்களுக்கும் மருத்துவ சான்றிதழ்களை

வழங்கி உள்ளனர். மேலும், 16,366 வளரிளம் பருவ தொழிலாளர்களுக்கு உடல் தகுதி சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

### 2.7.2. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வியக்கக அலுவலர்கள் விபத்துக்களை குறைக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பொருட்டு, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு

காலமுறை அடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகளில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை ஆய்வு செய்து, அத்தொழிற்சாலைகளில் நிலவும் அபாயங்கள் குறித்தும் அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

2023–2024–ஆம் நிதி ஆண்டில் இக்குழுக்களால் 95 பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, 5,705 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.7.3. பாதுகாப்பு பயிற்சி

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2023–2024–ஆம்

நிதி ஆண்டில் 466 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 27,067 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு கருத்தரங்குகள் மூலம் பாதுகாப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தேசிய பாதுகாப்பு குழுமம் மற்றும் தேசிய உற்பத்தி குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து இவ்வியக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், நேரடித் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

### 2.7.4. பயிற்சி பிரிவு

மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு உற்பத்தி செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளின் பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு விருதுநகரில் கூடுதல் இயக்குநர் தலைமையில்

இயங்கி வந்த நடமாடும் கண்காணிப்புக்குழுவானது பயிற்சி பிரிவாக மாற்றம் செய்யப்பட்டு சென்னையில் கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு துணை இயக்குநர் பதவியுடன் இயங்கிவருகிறது.

இப்பயிற்சி பிரிவு உருவாக்கப்பட்டதிலிருந்து, 42 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 2,225 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.7.5. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவது இவ்வியக்கக அலுவலர்களால் உறுதி செய்யப்படுகிறது. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வளிமண்டல அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து

அழுத்தக்கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனை அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனை அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நுண்ணொலி சோதனைகளுக்கும் உட்படுத்தப்படுகிறது. 2023–2024–ஆம் நிதி ஆண்டில் 1,38,685 வெளிப்புற சோதனைகள், 1,057 உட்புற சோதனைகள், 20,874 நீரழுத்த சோதனைகள் மற்றும் 7,567 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.8. மாநில தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு

மாநில தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு

குழுக்களானது, தீ விபத்துகள் / தொழிலக விபத்துகளை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

19.10.2023 அன்று நடைபெற்ற முதல் மாநில தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு கூட்டத்தில், தீப்பெட்டி மற்றும் பட்டாசு ஆலைகளில் ஆய்வு மேற்கொள்ளும் ஆய்வுக்குழுக்களால் கடைபிடிக்கப்பட வேண்டிய நிலையான இயக்க வழிமுறைகள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ள நிலையான இயக்க வழிமுறைகள் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய திரவ மற்றும் வாயு நிறுவல்களுக்கான நிலையான இயக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## 2.9. பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

### 2.9.1. மாநில பாதுகாப்பு விருதுகள்

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் செயல்படும் தொழிற்சாலை நிர்வாகத்தினரை ஊக்குவித்து அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்துகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் தலா 90 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.9.2. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் "தமிழ்நாடு அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.10. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நல சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006-ன் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் இதர வசதிகளை உறுதி செய்வதே இவ்வியக்ககத்தில் 2013-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவின் முதன்மை நோக்கமாகும். கட்டட மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதோடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அளித்து கட்டுமான இடங்களில் பாதுகாப்பினை மேம்படுத்தவும், விபத்துக்களை குறைக்கவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

இவ்வியக்ககத்தால் கீழ்கண்ட தொழிலாளர் நலச் சட்டங்கள் கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006
2. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.
3. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல்

மற்றும் பணிநிலைமைகள்) சட்டம் 1979, மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.

4. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.
5. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.
6. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.
7. சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.
8. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், 1975.
9. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.

31.03.2024 அன்றுள்ளவாறு 2,277 இடங்களில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 4,10,401 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

2023-2024-ஆம் நிதி ஆண்டில், 1,108 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, 2,271 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்டவிதிகளை மீறி செயல்பட்ட நிறுவனங்கள் மீது 294 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் 173 வழக்குகளில் ரூ.6,94,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**2.11. கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் வணிகம் புரிதலை எளிதாக்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்**

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக

வலைதளத்தின் (https://dish.tn.gov.in) மூலம் கட்டுமான நிறுவனங்கள் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், 1996–ன் கீழ் பதிவு சான்றுகள் பெற விண்ணப்பித்து இணைய வழியாகவே பதிவு சான்றுகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 2.12. ஆய்வு முறை

இடர் அளவீட்டின் அடிப்படையிலான ஆய்வு முறையின் கீழ், கட்டுமான பணித்தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.12.1. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்

500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறித்து வரையறை இல்லாமல் 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட அடுக்குமாடி கட்டடங்கள், அனைத்து இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

### 2.12.2. நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

50 முதல் 500 தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறித்து வரையறை இல்லாமல் 2–லிருந்து 5 தளங்கள் வரை கொண்ட

கட்டடங்கள் ஆகியவை நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

### 2.12.3. குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

அலுவலரின் ஆய்வு அட்டவணை இணையவழியாக நிர்ணயம் செய்யப்படும். கால இடைவெளிப்படி, கட்டுமானப் பணியிடங்கள் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் ஆய்விற்கு தெரிவு செய்யப்படும்.

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் வருடத்திற்கு ஒருமுறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

## 2.13. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

"சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்" பின்வரும் கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அ) நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

ஆ) குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும். எனினும் இத்தகைய கட்டடம் மற்றும் பிற கட்டுமான நிறுவனங்களில் புகார், விபத்து அல்லது பிற அவசர நிகழ்வுகளில் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் அனுமதியுடன் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**2.14. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு**

கட்டுமான இடங்கள், அதிகப்படியான தொழிலாளர்கள் செறிந்துள்ளதாகவும், போதிய

கல்வியறிவு இல்லாத வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக இருப்பதாலும், பாதுகாப்பான பணி முறைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததாலும் அதிக விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாக உள்ளதால் அவர்களது தாய் மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

2023-2024-ஆம் நிதி ஆண்டில், 3,811 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 65 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம்

பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு விபத்துகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

### 2.15. சிறப்பு முயற்சிகள்

### 2.15.1. தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு குறும்படம் தயாரித்தல்

தொழிற்சாலைகளில் வரையறுக்கப்பட்ட இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிப்பதற்காக ரூ.10 இலட்சம் செலவில் குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.15.2. இவ்வியக்ககத்தின் மருத்துவ அலுவலர்களுக்கான மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்

இவ்வியக்ககத்தில் செயல்படும் தொழில் சுகாதார ஆய்வகத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் மருத்துவ அலுவலர்களின் பயன்பாட்டிற்காக ரூ.19.50 இலட்சம் செலவில் மருத்துவ உபகரணங்கள் பெற்று வழங்கப்பட்டன.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை

### வேலைவாய்ப்பு பிரிவு

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களது வேலைபெறும் திறனை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்கள் வேலை தேடுபவர்கள் மற்றும் வேலையளிப்பவர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுவதோடு வேலை தேடுபவர்களை பதிவு செய்தல், நிறுவனங்களிலிருந்து காலியிட விபரங்களை சேகரிப்பது, அறிவிக்கப்பட்ட காலியிடங்களுக்கு தகுதியான வேலை நாடுநர்களை பரிந்துரைத்தல், வளாக ஆட்சேர்ப்பு, தகவல்களை காட்சிப்படுத்துதல், தொழில்நெறி வழிகாட்டுதல்

மற்றும் ஆலோசனை வழங்குதல் போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துதல் போன்ற வேலைவாய்ப்பு உதவி சேவைகளை வழங்குகின்றன.

## 3.1. வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக கட்டமைப்பு

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் தலைவர் ஆவார். சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்களில் மண்டல இணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சார்நிலை அலுவலகங்கள் செயல்படுகின்றன.

38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும், 2 தொழில்சார் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும்,

1 மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையமும், 5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டல் மையங்களும், 1 பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டல் மையமும் மற்றும் 1 மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமும் இவற்றில் அடங்கும்.

### 3.2 வேலைவாய்ப்பு பிரிவின் செயல்பாடுகள்

1. வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், பதிவுகளை முழுமைப்படுத்துதல் மற்றும் பதிவினை புதுப்பித்தல்.
2. அரசு / அரசு சார் நிறுவனங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றால் அறிவிப்பு செய்யப்படும் பணிக்காலியிடங்களுக்கு வேலைநாடுநர்களை பரிந்துரை செய்தல்.

3. அலுவலகங்களுக்கு வருகைபுரியும் வேலைநாடுநர்களுக்கும், பல்வேறு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.
4. ஒன்றிய அரசு / மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், மாதிரித் தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்துதல்.
5. அனைத்துவகை போட்டித் தேர்வுகளுக்குமான மென்பாடக்குறிப்புகளை துறையின் மெய்நிகர் கற்றல் இணையம் வாயிலாக வழங்குதல்.
6. சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதன் வாயிலாக தனியார்துறையில்

வேலைநாடுநர்களைப் பணியமர்த்துவதற்கான களமாக செயல்படுதல்.

7. தனியார்துறை வேலை இணையம் வாயிலாக வேலைநாடுநர்கள் தனியார்துறையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உதவி செய்தல்.
8. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டத்தை செயல்படுத்துதல்.
9. வேலை நிலவரத்தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்தல்.

## 3.3. வேலைவாய்ப்பு இணையதளம்

(www.tnvelaivaaippu. tn.gov.in)

வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், பதிவுகளைப் புதுப்பித்தல், கூடுதல் கல்வித் தகுதிகளைப் பதிவு செய்தல், கேட்பு செய்யப்பட்ட பணிக்காலியிடங்களுக்கு பதிவுதாரர்களை பரிந்துரை

செய்தல் போன்ற துறைகளின் அனைத்து பணிகளும் வெளிப்படைத்தன்மையுடன் இணைய வழியில் மேற்கொள்ளும் பொருட்டு வேலைவாய்ப்பு இணையதளம் இயங்கி வருகிறது.

31.03.2024 அன்றைய நிலவரப்படி துறையின் இவ்விணையதளம் வாயிலாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில், 54,25,114 பதிவுதாரர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 25,00,134 நபர்கள் ஆண்கள், 29,24,395 நபர்கள் பெண்கள் மற்றும் 285 நபர்கள் திருநங்கைகள் ஆவர்.

**உயிர்ப் பதிவேடு விவரங்கள் : (31.03.2024 அன்றைய நிலவரப்படி)**

| விவரங்கள் | பதிவுதாரர்கள் |
|---|---|
| மொத்த பதிவுதாரர்கள் | 54,25,114 |
| 18 வயதிற்கு உட்பட்ட பள்ளி மாணவர்கள் | 10,83,837 |
| 19 முதல் 30 வயதிற்கு உட்பட்ட உயர்கல்வி பயிலும் மாணவர்கள் | 23,92,409 |
| 31 முதல் 45 வயதிற்குட்பட்ட வேலை நாடுநர்கள் | 17,03,431 |
| 46 முதல் 60 வயதிற்கு உட்பட்ட பதிவுதாரர்கள் | 2,38,358 |
| 60 வயதிற்கு மேற்பட்ட பதிவுதாரர்கள் | 7,079 |

## 3.4. தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்

வேலைநாடுநர்களுக்கு பதிவின் போது வழிகாட்டுதல், தனிநபர் வழிகாட்டல், குழு

வழிகாட்டல், தனிநபர்களுக்கான தகவல்களை காட்சிப்படுத்துதல் போன்ற பணிகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் வேலைநாடுநர்களின் நலன் கருதி அலுவலக வளாகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அலுவலகத்திற்கு வெளியே கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் நிகழ்த்தப்பட்டு பல்வேறு உயர்கல்வி வாய்ப்புகள், உயர்கல்விக்கான நுழைவுத்தேர்வுகள், அரசு வேலைவாய்ப்பு, தனியார் வேலைவாய்ப்பு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு, திறன்பயிற்சி குறித்த விவரங்கள், கல்வி உதவித்தொகை, தொழில்முனைவோர் திட்டங்கள் போன்றவை குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளும் ஆண்டிற்கு ஒருமுறை அனைத்து மாவட்டங்களிலும்

ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.

### 3.5. தன்னார்வ பயிலும் வட்டங்கள்

அரசுப்பணி பெற விரும்பும் இளைஞர்கள் போட்டித்தேர்வுகளுக்கு தயார் செய்ய உதவும் வகையில் தன்னார்வ பயிலும் வட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. இதன் வாயிலாக ஒன்றிய/மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. மாதிரித் தேர்வுகளும், மாதிரி நேர்காணல்களும் நடத்தப்படுகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.4.22 கோடி செலவில் 375 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 18,359 தேர்வர்கள் கலந்து

கொண்டனர். அதில் 1,925 ஆர்வலர்கள் பல்வேறு போட்டித்தேர்வுகளில் பல்வேறு நிலைகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

### 3.6. பல்கலைக்கழகங்களில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையங்கள்

போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சி மையங்கள் பின்வரும் பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்ட கலை அறிவியில் கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் |
|---|---|
| 1 | சென்னை பல்கலைக்கழகம், சென்னை |
| 2 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் |
| 3 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி |
| 4 | அண்ணாமலை பல்கலைக்கழகம், கடலூர் |
| 5 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை |
| 6 | அன்னை தெரசா பல்கலைக்கழகம், திண்டுக்கல் |

| | |
|---|---|
| 7 | அழகப்பா பல்கலைக்கழகம், சிவகங்கை |
| 8 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 9 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் |
| 10 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி |

2023–2024 ஆம் நிதியாண்டில் கல்லூரிகளில் நடத்தப்பட்ட 76 இலவச பயிற்சி வகுப்புகளில் 4,476 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**3.7. மெய்நிகர் கற்றல் இணையதளம் (https://tamilnaducareerservices.tn.gov.in)**

போட்டித்தேர்வுகளுக்கான இணையவழி கற்றலை வழங்கும் வகையில் மெய்நிகர் கற்றல் இணையதளம் துவக்கப்பட்டது. பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான காணொளி காட்சிப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் மற்றும் மென்பாடக்குறிப்புகள், அலகுத் தேர்வுகள், மாதிரித்தேர்வுகள் ஆகியவை இணையதளத்தில்

பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்பாடக்குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் அளிக்கப்பட்டுள்ளன.

பதிவுதாரர்கள் இப்பாடக்குறிப்புகளை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 31.03.2024 அன்றைய நிலவரப்படி இவ்விணையதளத்தில் 3,10,256 தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர் மற்றும் 404 மென் பாடக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விணையதளத்தை 78,74,663 நபர்கள் பார்வையிட்டுள்ளனர். இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதற்கான பாடக்குறிப்புகளை கொள்முதல் செய்வதற்கு ரூ.15.68 இலட்சம் ஆண்டுதோறும் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 3.8 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டல் மையங்கள் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களுக்கு தகுதியான பணிவாய்ப்புகளை கண்டறிந்து வழிகாட்டுதல், பயிற்சிகள் மூலம் அவர்களது வேலைப் பெறும் திறனை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வைந்து மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**இம்மையங்களின் முக்கிய பணிகள்:–**

1) தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் தொழில் தகவல்கள் வழங்குதல்

2) போட்டித்தேர்வுகளுக்கு முந்தைய பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

3) தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல்

4) தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்

5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் குறித்த தகவல்களை காட்சிப்படுத்துதல்

6) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் தொழில்நெறி வழிகாட்டல் உரைகள் நிகழ்த்துதல்.

இம்மையங்களின் செயல்பாட்டிற்காக அரசு ஆண்டுதோறும் ரூ.20.40 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

## 3.9 பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

உதகமண்டலத்தில் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் மையம் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் வேலைநாடுநர்களுக்கான காலிப்பணியிடங்கள் குறித்து தொழில்நெறி வழிகாட்டுதல், போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து தொழில்நெறி வழிகாட்டுதல் உரைகள் நிகழ்த்துதல், பழங்குடியினர் நலப்பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்குதல், தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் நடத்துதல் மற்றும் சுய வேலைவாய்ப்பு

திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு உண்டாக்குதல் ஆகியவை இம்மையத்தின் முக்கிய பணிகளாகும்.

### 3.10. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்

சென்னை மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களது தேவைகளை நிறைவு செய்வதற்காக சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும், அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனை தவிர்த்து போட்டித்தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பல்வேறு வேலைவாய்ப்புகள், திறன் பயிற்சிகள் / உதவித் தொகைகள் / சுயவேலைவாய்ப்பிற்கான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்,

தனியார் துறை வேலைவாய்ப்பு பெற உதவுதல் போன்ற பணிகள் இப்பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.11 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்

இத்திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில் ஐந்து ஆண்டுகள் நிறைவு செய்து காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. உதவித் தொகை விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | கல்வித் தகுதி | உதவித் தொகை/மாதம் |
|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு தோல்வி | ரூ.200/– |
| 2 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | ரூ.300/– |

| | | |
|---|---|---|
| 3 | மேல்நிலைக் கல்வி தேர்ச்சி | ரூ.400/- |
| 4 | பட்டப்படிப்பு தேர்ச்சி | ரூ.600/- |

இவ்வுதவித் தொகை காலாண்டுதோறும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில் 25,396 பயனாளிகளுக்கு ரூ.23.44 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**3.12 அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்**

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையானது மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து

உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு, வயதுவரம்பு மற்றும் பெற்றோரது ஆண்டு உச்ச வருமான வரம்பு போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

| வ.எண். | கல்வித் தகுதி | உதவித் தொகை/மாதம் |
|---|---|---|
| 1 | எழுதப் படிக்க தெரியாதவர்கள் முதல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி வரை | ரூ.600/- |
| 2 | மேல்நிலைக் கல்வி தேர்ச்சி | ரூ.750/- |
| 3 | பட்டப்படிப்பு தேர்ச்சி | ரூ.1000/- |

2023-2024 ஆம் நிதியாண்டில் 3,290 பயனாளிகளுக்கு ரூ.8.51 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்துறையால் வழங்கப்படுகிறது.

### 3.13 தனியார்துறை பணியமர்த்தல்

தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களையும், வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்களையும் நேரடியாக இணைத்து தனியார் துறையில் பணிநியமனம் பெற்று வழங்குவதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துகின்றன. இம்முகாம்கள் மாதம் ஒருமுறை சிறிய அளவில் அலுவலக வளாகத்தில் நடத்தப்படுகின்றன. மேலும் ஆண்டிற்கு இருமுறை பெரிய அளவில் மாவட்டத்தில் ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் அதிக அளவிலான வேலையளிக்கும்

நிறுவனங்கள் மற்றும் வேலைநாடுநர்கள் பங்கேற்புடன் நடத்தப்படுகின்றது.

### 3.13.1. டாக்டர்.கலைஞர் நூற்றாண்டு சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டன. இம்முகாம்கள் வாயிலாக 42,261 வேலை நாடுநர்கள் தனியார்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இச்சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்காக அரசால் ரூ. 2.00 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**2023–2024–ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் பற்றிய விபரம்:**

| | | |
|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | 365 |

| | | |
|---|---|---|
| 2 | வேலையளிப்பவர்களின் எண்ணிக்கை | 18,981 |
| 3 | வேலைநாடுநர்களின் எண்ணிக்கை | 3,48,885 |
| 4 | பணிநியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை | 58,108 |

**3.14 தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையம் (www.tnprivatejobs.tn.gov.in)**

தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையமானது, இணைய வழியே வேலையளிக்கும் நிறுவனங்களையும் மற்றும் வேலைநாடுநர்களையும் இணைத்து தனியார் துறை வேலைவாய்ப்புகளை பெற்று வழங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

வேலையளிக்கும் தனியார் நிறுவனங்கள் தங்களது பணிக்காலியிடங்களை இவ்விணையதளத்தில் வெளியிடுவதற்கும், அப்பணிக்காலியிடங்களில் தங்களது கல்வித்தகுதிக்கேற்ற பணிகளுக்கு வேலைநாடுநர்கள் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்து

மாவட்டங்களிலும் நடைபெறும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் குறித்து முன்கூட்டியே வேலைநாடுநர்கள்/ தனியார்துறை நிறுவனங்கள் அறிந்துகொண்டு அதில் கலந்து கொள்வதற்கு தங்கள் விருப்பத்தை பதிவு செய்யவும் இவ்விணையம் உதவுகிறது.

**தனியார்துறை வேலை இணையம் தொடர்பான புள்ளி விவரங்கள் (31.03.2024 அன்றைய நிலவரப்படி)**

| | | |
|---|---|---|
| 1 | பதிவுசெய்துள்ள வேலைநாடுநர்கள் | 3,06,335 |
| 2 | பதிவுசெய்துள்ள வேலையளிப்பவர்கள் | 7,108 |
| 3 | அறிவிக்கப்பட்ட பணிக்காலியிடங்கள் | 1,65,628 |
| 4 | வழங்கப்பட்ட பணி நியமனங்கள் | 38,828 |

### 3.15 மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் சென்னை, கிண்டியில் இயங்கி வருகிறது. இந்த மையம் முக்கியமாக சைக்கோமெட்ரிக் சோதனைகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசனை திட்டங்கள் மூலம் இளைஞர்களுக்கு தகவல் அளித்து தங்களது வாழ்க்கை தொழில் குறித்த முடிவுகளை எடுப்பதற்கு உதவி செய்கிறது.

போட்டித்தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதோடு, பல்வேறு தொழில்நெறி வாய்ப்புகள் குறித்த தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் சிறார்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியதோடு, இப்போது

'பறவை' திட்டத்தின் கீழ், சைக்கோமெட்ரிக் சோதனைகள் மற்றும் தொழில் ஆலோசனை நிகழ்ச்சிகள் முதல்முறையாக இளம் சிறார் குற்றவாளிகளுக்கு, சென்னை மாநகர காவல்துறையுடன் இணைந்து நடத்தப்படுகின்றன. 2023–2024 ஆம் ஆண்டில் 9 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன மற்றும் 319 மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 108 பேர் பல்வேறு நிலை போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றனர்.

### 3.16 கல்வித் தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம், இரயில்வே தேர்வு வாரியம் போன்ற பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் போட்டித்தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும்

வகையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் கல்வித் தொலைக்காட்சி வாயிலாக இலவசமாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. இதற்காக அரசால் ஆண்டுதோறும் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஒளிபரப்பப்படுவதுடன், மாலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை மறுஒளிபரப்பும் செய்யப்படுகிறது. 31.03.2024 அன்றைய நிலவரப்படி போட்டித் தேர்வுகளுக்காக 1,052 மணிநேர வகுப்புகள் ஒளிபரப்பப்பட்டுள்ளன. இந்த காணொளிப் பதிவுகள் இத்துறையின் YouTube சேனலிலும் ("TN Career Services Employment") பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த சேனலுக்கு இதுவரை 1,43,610 சந்தாதாரர்கள் உள்ளனர்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### பயிற்சி பிரிவு

இளைஞர்கள் தங்களை சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளவும், நிலைத்திருக்கவும், வெற்றி பெறுவதற்கும் திறன் மேம்பாடு இன்றியமையாததாகும். நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு திறன்களை வளர்த்துக் கொள்வது வருங்காலங்களில் வெற்றி பெற அவசிய தேவையாகும். ஊதியம் பெறும் வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புகளை பெறும் திறன், மாறிவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழிலாளர் தேவைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும் திறன், ஆகியவற்றை மேம்படுத்துவதில் திறன் மேம்பாடு முக்கிய பங்களிக்கிறது. இதன்படி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவு, தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல திறன் கொண்ட உலக தரம்

வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக பயிற்றுவிக்கப்படும் பல்வேறு பயிற்சிகள் மூலம் திறன் பெற்ற மனித வளத்தை மேம்படுத்தி இந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிறது.

### 3.17 நிர்வாக கட்டமைப்பு:–

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர், துறைத்தலைவர் ஆவார். தலைமையகத்தில் ஆணையருக்கு உதவியாக இரண்டு கூடுதல் இயக்குநர்களும், ஒரு இணை இயக்குநரும் செயல்படுகின்றனர்.

பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களை கண்காணித்திட சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும்

விழுப்புரம் ஆகிய 7 மண்டலங்கள், மண்டல பயிற்சி இணை இயக்குநர்கள் (பயிற்சி) தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தற்போது 102 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் அந்நிலையங்களின் முதல்வர்களின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**துறையின் முக்கிய திறன் பயிற்சி திட்டங்கள்:–**

1. கைவினைஞர் பயிற்சித் திட்டம் (Craftsmen Training Scheme)
2. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (Apprenticeship Training Scheme)
3. தொழிற்பள்ளி (Industrial School)
4. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல் (Public Private Partnership)

5. தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன் வலுப்படுத்துதல் திட்டம் (STRIVE)
6. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டம் (NAPS)
7. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களாக மாற்றுதல். (Industry 4.0 Technology Centres).

## 3.18 கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS)

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களுக்கு ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட காலத்திற்கு நீண்ட கால பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சித் துறையின் இந்த முக்கிய தொழிற்பயிற்சி திட்டத்தின் மூலம் தொழில்துறையின் தற்போதைய மற்றும் எதிர்கால திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம்,

தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக நீண்ட கால பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியில், 70% செய்முறை பயிற்சியுடன், வேலைவாய்ப்புத் திறன்களோடு தொடர்புடைய கருத்தியலும் அடங்கும்.

### 3.19 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

தொழில் வளர்ச்சியடைந்த தமிழ்நாட்டில் 102 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 56 பொறியியல் தொழிற் பிரிவுகளில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. வெல்டர், ஃபிட்டர், டர்னர் போன்ற வழக்கமான தொழிற்பிரிவுகளுடன் கூடுதலாக நவீன கால தொழிற்பிரிவுகளான லாஜிஸ்டிக்ஸ் அசிஸ்டண்ட், ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டண்ட், டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்ஸ் ஆகியவற்றிலும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்பிரிவிற்கேற்றவாறு பயிற்சி காலம் 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஜூலை/ஆகஸ்ட் மாதங்களில் மதிப்பெண் அடிப்படையிலும், நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றியும் சேர்க்கை, தகுதி அடிப்படையில் நடத்தப்படுகிறது. மாநில அளவில் இணையவழி கலந்தாய்வு URL: www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை தேர்வு செய்யலாம்.

2023-2024 ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இதுவரையில் இல்லாத அளவுக்கு 94.58% சேர்க்கை நடைபெற்று, 30,200 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

## 3.20 நலிந்த பிரிவுகளை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திறன் பயிற்சி

2030 ஆம் ஆண்டிற்குள், கல்வியில் பாலின ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவில் உள்ள குழந்தைகள் உட்பட அனைவரும் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியின் அனைத்து நிலைகளிலும் சமநிலையில் அடைவதை நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5–ல் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர், பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு திறன் பயிற்சி வழங்குவதன் மூலம் நல்ல வேலைவாய்ப்பு பெறவும், ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கும், அனைவருக்கும் உலக அளவில் தரமான உயர்கல்வி

கிடைக்கச் செய்வதற்கும் வழிவகை செய்வதன் மூலம் இந்த இலக்கின் நோக்கம் எய்தப்படுகிறது.

## 3.21 பட்டியல் இன மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் பயிற்சி

மாநிலத்தில் உள்ள பட்டியல் இன மாணவர்களுக்காக பிரத்யேகமாக இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2023–2024 ஆம் ஆண்டில், இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 100% மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 356 ஆகும்.

| வ. எண் | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கடலூர் | சிதம்பரம் | 232 | 232 |
| 2 | திருவள்ளூர் | வடகரை | 124 | 124 |
| | | மொத்தம் | 356 | 356 |

பிற அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மொத்த இருக்கைகளில் பட்டியல் இனத்தவருக்கென 18% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 9,324 பட்டியலின மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளதன் மூலம் பட்டியலினத்தவரின் சேர்க்கை 38% என்பது மாநிலத்தில் அனைத்து பிரிவினருக்குமான வளர்ச்சியை பறைசாற்றுவதாகவுள்ளது.

**3.22 பழங்குடியின மாணவர்களை மேம்படுத்துவதற்கான நீண்டகால பயிற்சி**

இதர அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மொத்த சேர்க்கை திறனில் 1% இடங்கள் பழங்குடியின மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன, இதில் 2023-2024 ஆம் ஆண்டில் 243 பழங்குடி மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தில் பழங்குடியின மாணவர்களுக்காக பிரத்யேகமாக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 803 மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

| வ. எண் | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | பழங்குடியினர் | மொத்தம் |
| 1 | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 236 | 82 | 202 |
| 2 | கோயம்புத்தூர் | ஆனைகட்டி | 124 | 100 | 124 |
| 3 | சேலம் | கருமந்துறை | 200 | 161 | 182 |
| 4 | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 240 | 203 | 232 |
| 5 | நாமக்கல் | கொல்லிமலை | 216 | 169 | 191 |
| 6 | உதகமண்டலம் | கூடலூர் | 240 | 88 | 219 |
| | மொத்தம் | | 1256 | 803 | 1150 |

### 3.22.1 மாற்றுத்திறனாளி இளைஞர்களை மேம்படுத்துவதற்கான நீண்டகால பயிற்சி.

3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத இளைஞர்களுக்கு பொருத்துநர் பிரிவில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2023-2024 ஆம் ஆண்டில், 22 மாணவர்கள் இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

| வ. எண். | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கப்பட்ட மாணவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி | சேர்க்கை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது | |
| 2 | கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை | 20 | 14 |
| 3 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | 20 | 8 |
| மொத்தம் | | | 40 | 22 |

மேலே குறிப்பிட்டுள்ளதை தவிர, அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மாற்றுத்

திறனாளி மாணவர்களுக்கு 5 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 67 பயிற்சியாளர்கள் 2023-2024 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 3.22.2 பெண்களின் திறனை மேம்படுத்துவதற்கான நீண்டகால பயிற்சி

நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு-5 அடிப்படையில், மாநிலத்தில் உள்ள பிரத்யேக பத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் நான்கு மகளிர் பிரிவுகள் மூலம் மாணவிகளுக்கு நீண்டகால திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2023-ஆம் ஆண்டில் 2,711 மாணவிகள் இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

| வ. எண். | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கப்பட்ட மாணவிகள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி | 280 | 269 |
| 2 | சென்னை | அம்பத்தூர் | 160 | 144 |
| 3 | தேனி | ஆண்டிபட்டி | 208 | 208 |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 264 | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மதுரை | மதுரை | 232 | 232 |
| 6 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 304 | 269 |
| 7 | சேலம் | சேலம் | 260 | 260 |
| 8 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | 228 | 228 |
| 9 | கடலூர் | கடலூர் | 320 | 320 |
| 10 | திருச்சிராப்பள்ளி | புள்ளம்பாடி | 316 | 258 |
| பெண்கள் பிரிவு | | | | |
| 11 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 88 | 88 |
| 12 | கிருஷ்ணகிரி | ஓசூர் | 24 | 19 |
| 13 | கரூர் | கரூர் | 88 | 88 |
| 14 | நாமக்கல் | நாமக்கல் | 72 | 64 |
| **மொத்தம்** | | | **2844** | **2711** |

மேற்கூறியவற்றைத் தவிர, 2023–ஆம் ஆண்டில் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 30% இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டு 2,251 நபர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

### 3.22.3 சிறைக் கைதிகளுக்கு நீண்டகால பயிற்சி

சமூகத்தில் சிறைவாசிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தி கொள்வதற்கு, திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில்

5 தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் 2023–ஆம் ஆண்டில் 168 சிறைவாசிகள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 3.23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உயர்ரக மற்றும் நவீன கால தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்

தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யவும், இளைஞர்களை நவீன தொழில்நுட்பத்தில் வேலை பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக மாற்றவும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்கண்ட நவீன கால பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | பாடப்பிரிவுகள் | வ. எண். | பாடப்பிரிவுகள் |
|---|---|---|---|
| 1 | ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டண்ட் | 9 | ஸ்மார்ட்போன் டெக்னீ யன் |

| | | | |
|---|---|---|---|
| 2 | டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் | 10 | ஃபயர் டெக்னாலஜி & இண்டஸ்டீரியல் ஸேப்டி மேமேஜ்மெண்ட் |
| 3 | ஆட்டோபாடி ரிப்பேரிங் | 11 | இன்பிளாண்ட் லாஜிஸ்டிக்ஸ் |
| 4 | ஆட்டோபாடி பெயிண்டிங் | 12 | டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ் |
| 5 | ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்ஸ் | 13 | டூல் & டை மேக்கர் ( பிரஸ் டூல்ஸ் ஜிக்ஸ் & பிக்ஷர்ஸ்) |
| 6 | அட்வான்ஸ்டு சி.என்.சி. மிஷினிங் டெக்னீசியன் | 14 | பேசிக் டிசைனர் & விர்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்) |
| 7 | மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள் | 15 | மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் |
| 8 | இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீசியன் | 16 | இண்டிரியர் டிசைன் & டெக்கரேட்டர் |

## 3.24 மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு நீண்டகால தொழிற்பயிற்சி பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் விலையில்லா நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- ❖ வருடாந்திர கல்விக் கட்டணம் தள்ளுபடி.
- ❖ பேருந்து பயணச் சலுகை.
- ❖ தையல் கட்டணத்துடன், 2 இணை சீருடைகள் மற்றும் 1 இணை காலணிகள்.
- ❖ மாதம் ரூ.750/– உதவித்தொகை.
- ❖ தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவியர்க்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ரூ.1000/– கூடுதல் உதவித் தொகை.
- ❖ தமிழ் மொழியில் பாடப் புத்தகங்கள் வரைபடக் கருவிகள்.
- ❖ மிதிவண்டி
- ❖ செய்முறை பயிற்சிக்கான மூலப்பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள்

## 3.25 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 10 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் பெரும்பாலானவை சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள். நலிவடைந்த சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள தொழிற்பயிற்சி அளிக்கும் பொருட்டு இந்நிலையங்களுக்கு அரசு மானியங்கள் வழங்கப்படுகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் மொத்தம் உள்ள 1,092 இருக்கைகளில் 759 மாணவர்கள் 2023–ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் பராமரிப்பு மானியமாக ரூ.2.65 கோடி இந்த தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 3.26. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்

திறன் பெற்ற தொழிலாளர்கள் உருவாக்கத்தை அதிகரிக்க தனியார் நிறுவனங்களின் பங்கேற்பும் அரசால் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 310 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தேசிய தொழிற்பயிற்சி குழும அங்கீகாரத்துடன் 29,134 இருக்கைகளுடன் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. 2023–ஆம் ஆண்டில் இந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 14,002 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 3.27 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக் கட்டணம் வழங்குதல்

இணையதள கலந்தாய்வு மூலம் அரசு ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும் 50 சதவீத இடங்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாநில அரசு

வழங்குகிறது. மாநிலத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் அதிக அளவில் திறன் பெற்ற தொழிலாளர்களை உருவாக்குவதை உறுதிசெய்யும் வகையில் இத்திட்டத்தின் கீழ், பொறியியல் தொழிற் பிரிவிகளில் பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு ரூ.16,800/-ம், பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு ரூ.13,000/-ம் வழங்கப்படுகிறது. 2023-ஆம் ஆண்டில், இத்திட்டத்தில் 5,659 மாணவ/ மாணவியர் பயன்பெற்றுள்ளனர். இதற்கென ரூ.5.00 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 3.28 தொழிற்பிரிவுகள் சீரமைப்பு

தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் திறன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் மாநிலத்தில் உள்ள இளைஞர்களை அதிக வேலைவாய்ப்பிற்கு தகுதியுள்ளவர்களாக மாற்றவும்,

மாவட்ட வாரியான தேவை சார்ந்த தொழிற் பிரிவுகளில் பயிற்சி வழங்கவும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இருந்த தொழிற்பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்டு, வழக்கொழிந்த மற்றும் குறைந்த சேர்க்கையுடைய தொழிற்பிரிவுகள் மாற்றப்பட்டு இன்டிரியர் டிசைன் அண்டு டெக்கெரேசன், ஸ்மார்ட் போன் டெக்னீஷியன் கம் ஆப் டெஸ்டர், ஐ.ஓ.டி டெக்னீஷியன் (ஸ்மார்ட் ஹெல்த் கேர்), வாட்ச் அண்டு கிளாக் ரிப்பேர் போன்ற தொழிற்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**3.29. 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்துதல்**

2030–ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு, கண்ணியமான வேலைகள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியவற்றிற்கான

தொழில்நுட்ப மற்றும் தொழில் திறன்கள் உள்ளிட்ட பொருத்தமான திறன்களைக் கொண்ட இளைஞர்கள் மற்றும் வயது வந்தோரின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரித்தல் ஆகியவை நீடித்த வளர்ச்சி இலக்கு 4.4–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாறிவரும் காலத்திற்கேற்ப, தொழில்நுட்பங்களும் மாறி வருகின்றன. தொழில்நுட்பத்தில் புதிய முன்னேற்றங்கள் தோன்றியுள்ளதால், தற்போது கற்பிக்கப்படும் பல தொழிற்பிரிவுகளில் தொழில்நுட்ப மேம்பாடு தேவைப்படுகிறது. இருப்பினும், சமீபத்திய நிகழ்வுகள் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய தங்கள் திறன்களை மேம்படுத்த வேண்டும் என தெரிவிக்கின்றன. இந்த திறன் இடைவெளியை பூர்த்தி செய்ய, தற்போதைய மற்றும் எதிர்கால கல்வி முறையை தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் பொருத்தமானதாக புதிய

திறன்கள் / பயிற்சிகளை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் உள்ள 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.2,877.43 கோடி செலவில் தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகள் கூடுதலாக 5,140 இருக்கைகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்பட்டு பின்வரும் நீண்டகால தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | தொழிற்பிரிவுகள் | காலஅளவு | மொத்த இருக்கைகள் | சேர்க்கை |
|---|---|---|---|---|
| 1 | மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் | 1 வருடம் | 1420 | 1345 |
| 2 | இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் | 1 வருடம் | 2840 | 2558 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | அட்வான்ஸ்டு சிஎன்சி மிஷினிங் டெக்னீசியன் | 2 வருடங்கள் | 1656 | 1579 |
| 4 | பேசிக் டிசைனர் & விர்ச்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்) | 2 வருடங்கள் | 528 | 501 |
| 5 | மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள் | 2 வருடங்கள் | 1128 | 1055 |
| **மொத்தம்** | | | **7572** | **7038** |

2023–ஆம் ஆண்டில், தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் 7,038 மாணவர்கள் நீண்டகால படிப்புகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 71 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில், துவங்கப்பட்ட தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களுக்கும் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்த உட்கட்டமைப்பை பயன்படுத்தி, 23 குறுகிய கால பயிற்சிகள் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்கனவே பயின்று வரும் மாணவர்களுக்கும், பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பணியாளர்களுக்கும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 5,960 மாணவர்கள் இந்த குறுகிய கால பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிகளில் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

**குறுகிய கால தொழிற்பிரிவுகள் – மூன்று மாதங்கள்**

| வ. எண் | தொழிற்பிரிவுகள் | வ. எண் | தொழிற்பிரிவுகள் |
|---|---|---|---|
| 1 | இன்னோவேஷன் அண்டு டிசைன் திங்கிங் | 13 | எலக்ட்ரிக்கல் வெஹிக்கல் |
| 2 | ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் புரோடெக்ட் டிசைன் | 14 | இன்டர்நெட் ஆப் திங்க்ஸ் |

| | | | |
|---|---|---|---|
| 3 | புரோடெக்ட் டிசைன் அண்டு டெவெலப்மெண்ட் | 15 | அட்வான்ஸ்டு மெஷினிங் (மில்) |
| 4 | ஆட்டோ எலக்ட்ரிக்கல் டிசைன் அண்டு டெவெலப்மெண்ட் | 16 | அட்வான்ஸ்டு மெஷினிங் (சின்சி லேத்) |
| 5 | புரோடெக்ட் வெரிஃபிக்கேஷன் அண்டு அனலைசஸ் | 17 | அட்வான்ஸ்டு மெஷினிங் (ரோட்டரி 4வது ஆக்ஸிஸ் மில்) |
| 6 | கம்ப்யூட்டர் எய்டெட் மேனுபேக்சரிங் | 18 | அட்வான்ஸ்டு அடிட்டிவ் மேனுபேக்சரிங் |
| 7 | அட்வான்ஸ்டு கம்ப்யூட்டர் எய்டெட் மேனுபேக்சரிங் | 19 | அட்வான்ஸ்டு வெல்டிங் |
| 8 | பிராஸஸ் கண்ட்ரோல் அண்டு ஆட்டோமேஷன் | 20 | அட்வான்ஸ்டு பெயிண்டிங் டெக்னாலஜி |
| 9 | பண்டமென்டல்ஸ் ஆப் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் | 21 | இன்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் –I |
| 10 | அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் என்ஜினியரிங் | 22 | இன்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் –II |
| 11 | ஆட்டோமொபைல் மெயின்ட்டனன்ஸ், ரிப்பேர் அண்டு ஓவர்ஹால் | 23 | அட்வான்ஸ்டு பிளம்பிங் |
| 12 | ஆட்டோ எலக்ட்ரிக்கல் மெயின்ட்டனன்ஸ் | | |

அதன்படி, 14 தொழில்நுட்ப மையங்களில் இண்டஸ்ட்ரியல் ரோபோ வெல்டிங், சி.என்.சி லேத் மற்றும் மில்லிங் மெஷின் புரோகிராமர், 3டி பிரிண்டிங், லேசர் கட்டிங், எலக்ட்ரானிங் சர்க்யூட் போர்டு அசெம்பிளிங், புரோங்கிராமிங் அண்டு டெஸ்டிங் யூசிங் இன்டர்நெட் ஆப் திங்ஸ் (IoT), அட்வான்ஸ்டு பெயிண்டிங் டெக்னாலஜி மற்றும் பேட்டரி எலக்ட்ரிக் வெஹிக்கல் டெக்னீசியன் ஆகிய பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சிகள் 305 நபர்களுக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் நிலைய மேலாண்மைக் குழுக்கள் இதுவரை ரூ.3,76,600/- வருவாய் ஈட்டியுள்ளன. மேற்கண்ட பயிற்சிகள் கிண்டி, மதுரை, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திண்டுக்கல், ஓசூர், செங்கல்பட்டு, திருக்குவளை, தஞ்சாவூர், இராமநாதபுரம், மேட்டூர் அணை மற்றும் சிதம்பரம் ஆகிய தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் நடத்தப்பட்டுள்ளன.

## 3.30 அகில இந்திய தொழிற் தேர்வு மற்றும் சான்றிதழ்

அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு நாடு முழுவதும் பொதுத் தேர்வு புதுடெல்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகம் மூலம் நடத்தப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டு முதல், தலைமை பயிற்சி இயக்குநரகம், புதுடெல்லியால் நியமிக்கப்பட்ட முகமை மூலம் அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு அனைத்து தொழிற்பிரிவுகளிலும் கணினி வழித் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2023 ஆம் ஆண்டு தொழிற்தேர்வு முடிவுகள் பின்வருமாறு

| வ. எண் | விவரங்கள் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | | தேர்ச்சி சதவீதம் |
|---|---|---|---|---|
| | | தேர்வு எழுதியவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | |
| 1 | அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | 16239 | 15073 | 92.82 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 9483 | 7936 | 83.69 |

தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்சான்றிதழ் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (NCVT) வழங்கப்படுகிறது.

மாநில தொழிற்பயிற்சி குழும (SCVT) முறையில் 1,260 மாணவர்கள் தொழிற் தேர்வில் கலந்து கொண்டனர். 1,216 மாணவர்கள் தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ் இத்துறையால் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சி வழங்கப்பட்டு, இந்த மாணவர்கள் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் (SCVT) மதிப்பீடு

செய்யப்படுகிறார்கள். 2023–ஆம் ஆண்டில், 3,085 மாணவர்கள் 149 அணிகளில் பயிற்சி மதிப்பீடு செய்யப்பட்டு மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் இத்துறைக்கு ஒரு விண்ணப்பதாரருக்கு ரூ.1000/– மதிப்பீட்டுக் கட்டணமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 3.31. தொழில்துறை மதிப்புக்கான திறன் வலுப்படுத்துதல்

தொழில்துறை மதிப்பு மேம்பாட்டிற்கான திறன்களை வலுப்படுத்துதல் (STRIVE) என்பது, அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சி மூலம் வழங்கப்படும் திறன் பயிற்சியின் தரத்தையும், செயல்திறனையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடி முயற்சியாகும்.

இது 2017 முதல் 2022 வரையிலான ஐந்தாண்டுத் திட்டமாக துவங்கப்பட்டு மே 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது 100% ஒன்றிய அரசால் நிதியளிக்கப்படுகிறது மற்றும் இந்த திட்டம் பின்வரும் நான்கு கூறுகளைக் கொண்டுள்ளது:

**கோட்பாடு–1: தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்திறனை மேம்படுத்துதல்**

முதல் கட்டமாக, 2019–ல் 13 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் (விருதுநகர், திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், திண்டுக்கல், செங்கல்பட்டு, தூத்துக்குடி, நாமக்கல், பெரம்பலூர், கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சிவகங்கை) மற்றும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் (டான்பாஸ்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம், ராம்கோ தனியார் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பிஎசிஆர் தனியார் தொழிற்பயிற்சி நிலையம்) தேர்வு செய்யப்பட்டன.

மாநிலத்தின் சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில், 3–வது கட்டத்தில் கூடுதலாக 16 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் (அரியலூர், உளுந்தூர்பேட்டை, ஆண்டிபட்டி (ம), கடலூர் (ம), திண்டுக்கல் (ம), புதுக்கோட்டை, ஓசூர், மேட்டூர்அணை, கோயம்புத்தூர் (ம), குன்னூர், மதுரை (ம), கிண்டி, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் சிதம்பரம்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ரூ.24.49 கோடி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ததில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கருவிகள் மற்றும் உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் கற்றல் பொருட்கள், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிக்கான இனங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கும், பயிற்றுநர்களுக்கான தொழில் நிறுவன பயிற்சிகள் வழங்குதல் மற்றும் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு போதிய

வசதிகளை உருவாக்குதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கோட்பாடு–2: தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் திட்டம் ஆகியவற்றிற்கான மாநில அரசின் பங்களிப்பை மேம்படுத்துதல்.**

இந்த பகுதியின் நோக்கமானது, திறன் பயிற்சியின் கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளில் மாநில அரசின் திறன்களை அதிகரிப்பதாகும்:

1. மாநில அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றை மேம்படுத்தவும், தொழில் கூட்டமைப்புகளை (Industry Clusters) உருவாக்கிடவும் மாநில அரசுக்கு உதவுகிறது.

2. செயல்திறன் அடிப்படையிலான நிதியுதவி மூலம் திறன் சுற்றுச்சூழல் அமைப்பிற்குள் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த மாநிலங்களை ஊக்குவிக்கிறது.
3. மாநில அளவில் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவில் திறன் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துகிறது.

இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ.10.20 கோடியில் ஒன்றிய அரசுடன் மேற்கொள்ளப்பட்ட செயல்திறன் அடிப்படையிலான நிதி ஒப்பந்தத்தின்படி (Performance Based Funding Agreement) 30% முன்பண மானியமாக ரூ.3.06 கோடி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்சி மற்றும் பயிற்றுவித்தலை மேம்படுத்தும் நோக்கில்

கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர்களின் பணி முன்னேற்றத்திற்கான கொள்கை உருவாக்குதல்.
2. தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்றுநர்களின் காலிப்பணியிடங்களை குறைத்தல்.
3. தொழிற்பயிற்சி முடித்த பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பு குறித்த ஆய்வு நடத்துதல் (Tracer Study).

**கோட்பாடு– 3: கற்பித்தல் மற்றும் கற்றல் திறன்களை மேம்படுத்துதல்**

புதுதில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் தொழிற்பயிற்சி நிலையங்களில் நிர்வாக சீர்திருத்தங்களை அமல்படுத்த

மேற்கொள்ளப்படும் செயல்கள் இக்கோட்பாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

**கோட்பாடு–4: மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சித்திட்டம்**

தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு திட்டமானது ஒரு கூட்டமைப்பு முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன கூட்டமைப்புகளில் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அமைப்பை உருவாக்கும் ஒரு புதிய முயற்சியாகும்.

தேசிய கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழும (NCEC) பரிந்துரையின் அடிப்படையில் கோட்பாடு நான்கின் கீழ் 17 தொழில் கூட்டமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 3.32 தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (ATS)

### தொழிற்பழகுநர் பயிற்சி

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன், பகுதி திறன் பெற்ற தொழிலாளர்கள் மற்றும் புதிய தொழிலாளர்களுக்கு செய்முறைப் பயிற்சி அளிப்பதற்காக தொழிற்சாலைகளில் உள்ள வசதிகளைப் பயன்படுத்துவதாகும்.

குறைந்தபட்சம் 14 வயதுடைய தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றுள்ள பகுதி திறன் வாய்ந்த தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி பெற தகுதியுடையவர்கள் ஆவர். தமிழ்நாட்டில் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் 260 வரையறுக்கப்பட்ட தொழிற் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பயிற்சி காலம் 6

மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரை ஆகும். தலைமை பயிற்சி இயக்குநரகம் புதுதில்லி வரையறுத்துள்ளவாறு தொழிற்பழகுநர்களுக்கு ரூ.7,000/- பிரதிமாதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 482 நிறுவனங்களில் சுமார் 9,870 தொழிற்பழகுநர்கள் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி முடிந்தவுடன் புதிய தொழிற்பழகுநர்களுக்கு தேசிய அளவில் தொழிற்தேர்வு நடத்தப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. தொழிற்பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவுடன், புதுடில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்குநரகத்தால் (DGT) தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. (NAC)

### 3.33 தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (NAPS)

தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் பயிற்சி ஆர்வத்தை அதிகரிக்கும் பொருட்டு, தொழிற்பழகுநர்கள் சட்டம், 1961–ன் கீழ் தொழிற்பழகுநர்களை அமர்த்தும் நிறுவனங்களுக்கு நிதி ஊக்கத்தொகை வழங்குவதற்காக ஒன்றிய அரசு 2016 ஆம் ஆண்டு இத்திட்டத்தை தொடங்கியது. இந்த திட்டம் 2023 முதல் தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம்–2 (NAPS–2) ஆக தொடரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்பழகுநர்களுக்கு பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் உதவித் தொகையில் 25 சதவீதம் வீதம் அதிகபட்சமாக ஒரு தொழிற்பழகுநர்க்கு மாதத்திற்கு ரூ.1,500 வீதம் பகுதி உதவித் தொகையாக ஒன்றிய அரசு வழங்கும். ஒன்றிய அரசின் உதவித் தொகை, நேரடி நிதி

பரிமாற்றம் (DBT) மூலம் நேரடியாக தொழிற்பழகுநர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். பொதுத்துறை வங்கிகள் உட்பட ஒன்றிய மற்றும் மாநில அரசுத் துறைகள் மற்றும் ஒன்றிய மற்றும் மாநில பொதுத் துறைகளுக்கு என்ஏபிஎஸ்-2 இன் கீழ் உதவித்தொகை ஆதரவு கிடைக்காது.

**தொழிற்பயிற்சி பெறாதவர்களை நிறுவனங்களில் தொழிற்பழகுநராக சேர்த்தல்**

உயர்நிலைப் பள்ளி அல்லது சமமான அடிப்படைக் கல்வியை முடித்த தனிநபர்களுக்கு தொழிற்பயிற்சி பெறாதவர்கள் என்ற முறையில் தொழிற்பழகுநர் பயிற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் சேருவதற்கு முக்கிய தகுதி விண்ணப்பதாரர் 14 வயதை நிறைவு செய்வதாகும். மேலும் இத்தகுதியை பூர்த்தி செய்யும் எவரும்

தொழிற்பழகுநர் பயிற்சியைத் தொடரலாம். இவ்வாறு தொழிற்பயிற்சி பெறாதவர்களின் பயிற்சி காலம் 1 முதல் 2 ஆண்டுகள் வரை இருக்கும். தொழிற் பழகுநர் பயிற்சிக்காக அவர்களை பணிமனையில் அமர்த்துவதற்கு முன் அடிப்படை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தால் 3 மாத பயிற்சி அளிக்கப்படும். வரையறுக்கப்பட்ட தொழிற் பழகுநர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த இத்தகையை பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படும்.

### 3.34 தனியார் தொழிற் பள்ளிகள் மானியம்

உள்ளூர் தொழில் நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், 153 சுயநிதி மற்றும் 21 தனியார் நிதியுதவி பெறும் தொழிற் பள்ளிகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 2023 ஆம் ஆண்டில் 6,663 மாணவர்கள்

அனுமதிக்கப்பட்டுள்ளனர். மின்சாரம், இயந்திரவியல், ஆட்டோமொபைல், மின்னணுவியல், விருந்தோம்பல், ஆயத்த ஆடை, தகவல் தொழில்நுட்பம், ஆபீஸ் ஆட்டோமேஷன் மற்றும் சிவில் பிரிவுகளை உள்ளடக்கிய 57 தொழிற் பிரிவுகளில் ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான பயிற்சி அளிக்கப்படுகிறது. 8 மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 17 தொழிற் பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் படிப்பு வழங்கப்பட்டு வருகிறது. இது பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியராக சேருவதற்கு தகுதியாகும். மாநில தொழிற்பயிற்சி வாரியம் பொதுத் தேர்வுகளை நடத்தி, தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 21 தனியார் தொழிற் பள்ளிகள் அரசிடமிருந்து மானியம் பெறுகின்றன.

2023–2024 ஆம் நிதியாண்டில் அரசு உதவி பெறும் தொழிற் பள்ளிகளுக்கு ரூ.3.15 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 3.35 சிறந்த ஆசிரியர்களுக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

ஆண்டுதோறும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறந்த முறையில் திறன் பயிற்சி அளிக்கும் 12 நல்லாசிரியர்களுக்கு (முதல்வர்–2, பயிற்சி அலுவலர்–2, உதவி பயிற்சி அலுவலர்–4, இளநிலை பயிற்சி அலுவலர்–4) நல்லாசிரியர் விருது டாக்டர் இராதாகிருஷ்ணன் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தலா ரூ.10,000/– ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும்.

## 3.36 திறனாய்வு போட்டிகள்

தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சமுதாயத்தில் தங்களை உயர்த்திக் கொள்ளும் தளத்தை உருவாக்கவும், கீழ்க்கண்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன.

| வ. எண். | போட்டி | நடத்தியது | விருதுகள் | இந்த ஆண்டு பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 1. | 17 தொழிற் பிரிவுகளில் மாநில திறனாய்வு போட்டி | மாநில அரசு | ரூ.25,000/- & தகுதிச் சான்றிதழ் | 6 |
| 2. | 5 தொழிற் பிரிவுகளில் படைப்பு திறன் போட்டி | மாநில அரசு | ரூ.50,000/- & தகுதிச் சான்றிதழ் | 5 |

**அகில இந்திய அளவில் தொழிற்தேர்வில் முதலிடம்.**

2023-ஆம் ஆண்டில் திருவண்ணாமலை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மின்பணியாளர் பிரிவில் பயின்ற செல்வி என்.காவியா, தேசிய அளவில்

நடத்தப்பட்ட அகில இந்திய தொழிற்தேர்வில் மகளிர் பிரிவில் சிறந்த 10 தொழிற்பிரிவுகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

## 3.37 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியமர்த்தல் நடவடிக்கைகள்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது மிக இன்றியமையாத தேவையாகும். இம்மாநிலம், மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதில் மட்டும் கவனம் செலுத்துவதோடு அல்லாமல் தொடர்புடைய தொழில்களில் கண்ணியமான ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை உறுதி செய்கிறது. அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பணியமர்த்தல் வழங்க அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பணியமர்த்தும் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். பணியமர்த்தும் அலுவலர்,

தொழில் நிறுவனங்களை தொடர்பு கொண்டு வளாக நேர்காணலுக்கு ஏற்பாடு செய்கிறார். தேர்ச்சி பெற்ற மாணவர்களில் 80% பேர் 2023 ஆம் ஆண்டில் தங்கள் தொழிற்துறையில் பல்வேறு தொழில்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதன் புதிய முயற்சியாக M/s. டாடா டெக்னாலஜிஸ் மற்றும் அவர்களுடன் இணைந்துள்ள பிற தொழில் நிறுவனங்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 தொழிற்பயிற்சி நிலையங்களில் வளாக நேர்காணல் நடத்தப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் அடிப்படையில் தொழில் 4.0 தொழிற்பிரிவுகளில் பயின்ற பயிற்சியாளர்கள் திருவாளர்கள். ஃபாக்ஸ்கான், டாடா மோட்டார்ஸ், சினிடர் எலக்ட்ரிக், டான்ஃபோஸ், பாரத் பயோடெக், டிபிஜ காம்போசிட் மற்றும் ஸ்டெல்லர் பிளாஸ்டிக்ஸ் ஆகிய முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 3.38 பயிற்றுநர்களுக்கான பயிற்சி

பயிற்றுநர்களுக்கான பயிற்சி அனைத்து ஊழியர்களின் அறிவுத் தளத்தை விரிவுபடுத்த வழிவகுக்கிறது. ஒரு உருவாக்கப்பட்ட திறன் சார்ந்த பயிற்சித் திட்டம் அனைத்து ஊழியர்களையும் உயர் தரத்திற்கு உயர்த்துகிறது, இதனால் அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான திறன் மற்றும் அறிவுப் பயிற்சியைப் பெறுகிறார்கள், இதனால் அவர்களின் அறிவு மேம்படுகிறது.

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப, தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்கள் உயர் தொழில்நுட்பங்களின் தேவைகளுக்கு ஏற்ப தங்களை மேம்படுத்திக் கொள்ள போதுமான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

எனவே, பயிற்றுநர்கள் பின்வரும் முன்னணி தொழில்கள் / நிறுவனங்களில் தொடர்புடைய தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது: –

1. தேசிய திறன் பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை.

2. சீமென்ஸ் சிறப்பு மையம், எம்.ஐ.டி வளாகம், குரோம்பேட்டை, சென்னை.

3. M/s. மாருதி சுசூகி பிரைவேட் லிமிடெட், குர்கான், புது தில்லி

4. M/s. அசோக் லேலண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை

5. இந்தோ–ஜெர்மன் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி, ஜெர்மனி

6. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை.

- அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் மற்றும் பணியமர்த்தல் அலுவலர்களுக்கு பெங்களூரில் உள்ள குவெஸ்ட் அலையன்ஸ் மூலம் தலைமைப் பண்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.
- புனேயில் உள்ள திருவாளர்கள் டாடா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உதவியுடன் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில்நுட்ப மையங்களாக மாற்றும் முன்னோடித் திட்டத்தின் கீழ், தொழில் 4.0 தரத்திலான தொழிற் பிரிவுகளில் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக முதன்மை பயிற்சியாளர் (Master Trainner) பயிற்சி அளிக்கப்பட்டது.

2023-24 ஆம் நிதியாண்டில், 179 உதவி பயிற்சி அலுவலர்கள் / 306 இளநிலை பயிற்சி

அலுவலர்களுக்கு பின்வரும் தொழில் 4.0 பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1 மேனுபேக்சரிங் பிராசஸ் கன்ட்ரோல் அண்டு ஆட்டோமேசன்

2 இண்டஸ்டிரியல் ரோபாட்டிக்ஸ் அண்டு டிஜிட்டல் மேனுபேக்சரிங் டெக்னிசியன்

3 பேசிக் டிசைனர் அண்டு விர்ச்சுவல் வெரிபையர் (மெக்கானிக்கல்)

4 அட்வான்ஸ்டு சிஎன்சி மெசினிங் டெக்னிசியன்

5 மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள்

மேலும் கீழ்க்கண்ட பிரபல பயிற்சி நிறுவனங்களில் உதவி பயிற்சி அலுவலர்/ இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | நெட்டூர் டெக்னிக்கல் டிரைனிங் ஃபவுண்டேசன் (NTTF) | 100 பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது |
| 2 | வெல்டிங் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் (WRI) BHEL, திருச்சி | 40 பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 3 | நேஷனல் பவர் டிரைனிங் இன்ஸ்டிடியூட் (NPTI) நெய்வேலி | 20 பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது |

## 3.39 பணியிடைப் பயிற்சி வழங்குதல்

பணியிடைப் பயிற்சி என்பது பயிற்சியின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். இது அனைத்து மாணவர்களுக்கும் நிகழ்நேர பணி நிலைமைகள் மற்றும் நேரடி அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உள்ளகப் பயிற்சி, தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்களை தொழில்துறை சார்ந்த பணிகளை எதிர்கொள்ள ஊக்குவிப்பதாக அமையும். மாணவர்களிடையே தொழில் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தொடர்புடைய தொழில்களில் உடனடியாக வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவும்

பணியிடைப் பயிற்சி அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

### 3.40 சிறப்பு முனைப்புகள்

- ❖ அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் கருத்தியல் பாடங்களை நன்கு புரிந்து கொள்ளும் பொருட்டு, 14 தொழிற்பிரிவுகளுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கணிணி உதவியுடன் (e–content) உதவியுடன் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

- ❖ திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள சிறந்த ஆசிரியர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மலைப்பகுதிகளில் உள்ள 6 பழங்குடியினர்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன.

❖ 24 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஸ்மார்ட் (Smart Classroom) வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ பற்றவைப்பவர் தொழிற்பிரிவி பயிற்சி பெறும் மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வெல்டிங் சிமுலேட்டர் (Welding Simulator) மூலம் பற்றவைப்பவர் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் பெண் பயிற்சியாளர்களும் தன்னார்வமாக திறன் பயிற்சி பெறுகின்றனர்.

❖ அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயிற்சியாளர்களின் தகவல் தொடர்பினை மேம்படுத்துவதற்காக

மொழி மற்றும் மென்திறன் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது.

**3.41 தமிழ் மொழியில் பாடப்புத்தகங்கள்**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்கவும், தரமான திறன் பயிற்சி அளிக்கவும், பாடப்புத்தகங்கள் தமிழில் தயாரிக்கப்பட்டு அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தேசிய ஊடக தயாரிப்பு நிறுவனம் (NIMI), சென்னை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

**3.42 அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மாணவர்களுக்கு "நான் முதல்வன் திட்டத்தின் கீழ்" வேலைவாய்ப்பிற்கான அடிப்படை ஆங்கிலப் பயிற்சி**

பயிற்சியாளர்களின் புரிந்து கொள்ளும் திறனை அதிகரிக்கவும், தொழிற்சாலைக்கு தொடர்புடைய

திறனை அடையவும், "வேலைவாய்ப்பிற்கான அடிப்படை ஆங்கில பயிற்சி" நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயிற் யாளர்களுக்கு 60 மணி நேர பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, முன்னணி பல்கலைக்கழகத்தால் இரண்டு கட்ட மதிப்பீடும் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் 52,537 பயிற்சியாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்து உள்ளனர்.

## 3.43 தொழிற்சாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இடையிலான நட்புறவு

பயிற்சி முறைகளில் தொழிற்சாலைகளின் பங்கேற்பானது, தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்து தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையங்களில் திறன் வாய்ந்த மனித வளம் உருவாக்கப்படுகிறது. இக்குறிக்கோளை அடையும் வகையில், பின்வரும் முன்னணி தொழில் நிறுவனங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்களின் திறனை நவீன தொழில்நுட்ப உத்திகளில் மேம்படுத்தி, அதனை தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கும் வழங்கிட உதவுகின்றன. தொழிற்சாலை அனுபவம் அளித்தல், தொழிற்சாலைகளுக்கு அழைத்து செல்லுதல், நேரடி பயிற்சி, நிலைய மேலாண்மைக் குழுவில் பங்கு மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் விரிவுரைகள் வழங்குதல் ஆகியவற்றின் மூலம் தொழிற்சாலைகளின் எதிர்பார்ப்புகளுக்கும் உண்மையான பயிற்சி வெளிப்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைத்து

வருகின்றன. இந்த நடவடிக்கைகளை செயல்படுத்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

- ❖ சேம்சங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.
- ❖ பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை.
- ❖ இந்தியா பிஸ்டன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
- ❖ ஹைடெக் அராய் லிமிடெட், மதுரை.
- ❖ ஜே.பி.எம் ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், சென்னை.

❖ இசட்எப் டெக்னாலஜிஸ் லிமிடெட், சென்னை.

❖ இகராஷி மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.

❖ பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, சென்னை.

❖ கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட், இராணிப்பேட்டை

❖ வீனஸ் ஹோம் அப்ளையன்சஸ், தூத்துக்குடி

❖ வாப்கோ இந்தியா லிமிடெட், சென்னை.

❖ சிம்சன் அண்டு கோ., லிமிடெட், சென்னை.

❖ டைகின் ஏர்கண்டிஷனிங் பிரைவேட் லிமிடெட், சென்னை.

### 3.44 தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு

இத்துறையின் அனைத்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்ளவும், கண்காணிக்கவும், ஆணையரகம் மற்றும் மண்டல அளவில் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, 2023–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மெய்நிகர் வகுப்பறைகள், திறன்மிகு வகுப்பறைகள், மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் மூலமாக மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளை இப்பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அலுவலக நடைமுறைகளை கணிணி முறையில் நடத்துதல், மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மைக்காக இணையதளம் மூலம் சேர்க்கை மற்றும் தேர்வு மதிப்பீட்டில் துல்லியத்திற்காக கணினி அடிப்படையிலான

தேர்வு (சிபிடி) தேர்வு ஆகியவற்றையும் இப்பிரிவு ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. இயக்குநரகத்தில் கணிணி முறையிலான அலுவலக செயல்பாடு 2.5.2024 முதல் பயன்பாட்டில் உள்ளது. சார்நிலை அலுவலகங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.45 திறனை அதிகரிக்க புதிய முன் முயற்சிகள்

**தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத பகுதிகளில் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்குதல்**

புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பதன் மூலம், தொழிற்சாலைகளின் தேவைக்கு ஏற்ப தேவைப்படும் திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, அப்பகுதிகளில் உள்ள இளைஞர்களும் பயனடைவார்கள். எனவே, இந்த ஆண்டு 10 புதிய

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூபாய் 111 கோடி செலவில் துவக்கிட அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், "வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் ரூ.10.03 கோடியில் மற்றொரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### 4. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

### (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் என்பது அமைப்பு சார்ந்த துறைகளில் பணிபுரியும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும்.

ஒன்றிய அரசின், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கீழ் நாடாளுமன்றத்தில் 1948–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டப்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது "தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்" என்ற அமைப்பு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தற்போது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் தமிழ்நாடு முழுவதும் 40.21 லட்சம் தொழிலாளர்கள் மற்றும் 1.21 கோடி தொழிலாளர்களைச் சார்ந்தோர்களுக்கு மருத்துவ சேவை வழங்கி வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை மட்டுமல்லாது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம், காப்பீட்டாளரின் ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது அதனை ஈடுசெய்யும் வகையில் இழப்பீட்டையும் வழங்கி வருகிறது.

## 4.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

1) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை கொண்ட பருவ காலம் அல்லாத

தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு பொருந்தும்.

2) ரூ.21,000/- வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள்.

3) ரூ.25,000 வரை மாத ஊதியம் பெறும், ஆட்டிசம், பெருமூளை வாதம், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுகள் உடைய அனைத்து மாற்றுத் திறனாளி தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் பொருந்தும்.

4) நாள் ஒன்றுக்கு ரூ.176/- வரை வருமானம் ஈட்டும் பணியாளர்கள் தங்கள் பங்களிப்பு பங்குத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.

### 4.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு ஊதியம் முறையே 0.75% மற்றும் 3.25% மாதாந்திர பங்களிப்பை தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகள் தங்கள் பங்களிப்பாக வழங்குகின்றனர்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் முறையே 7:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் செலவுகள் பகிர்ந்துக் கொள்ளப்படுகின்றன.

### 4.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்

தமிழ்நாட்டில், 11 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மூலம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

| வ. எண் | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் விவரம் | துறைத் தலைமை |
|---|---|---|
| 1. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்:– அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர் , திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர். | மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம் (தொ.அ.ஈ), தமிழ்நாடு அரசு. |
| 2. | அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர் | மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம், தமிழ்நாடு அரசு. |
| 3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கே.கே.நகர், திருநெல்வேலி மற்றும் திருப்பூர் | புதுடெல்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது. |

மேலும் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள்

வழியாகவும் உயர்சிறப்பு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றன.

## 4.4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

தமிழகம் முழுவதும் 241 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சேவை வழங்குவதற்கு செயல்பட்டு வருகின்றன.

## 4.5. தமிழ்நாடு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (தொ.அ.ஈ) தலைமையில் செயல்பட்டு வருகிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் 7 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**4.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்**

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் அலோபதி மருத்துவ முறை சிகிச்சையுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | ஆயுஷ் பிரிவுகள் | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆயுர்வேதா | 8–அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சிவகாசி சேலம், ஓசூர் திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர். | 13 – திருநகர், தூத்துக்குடி, ராஜபாளையம், பள்ளிபாளையம், கும்பகோணம், பல்லாவரம், தாம்பரம், நந்தம்பாக்கம், அம்பத்தூர், ஆவடி, துடியலூர், உடுமலைப் பேட்டை மற்றும் திருப்பூர் –1. |
| 2 | யோகா | 8 – அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சிவகாசி சேலம், ஓசூர் திருச்சிராப்பள்ளி, மற்றும் வேலூர். | –– |
| 3 | யுனானி | 3– அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை. | 3 –தூத்துக்குடி, ஆம்பூர் மற்றும் ராணிப்பேட்டை. |

| | | | |
|---|---|---|---|
| 4 | சித்தா | 8 – அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர் மற்றும் சிவகாசி. | 43 – தாம்பரம், திருவொற்றியூர் திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், ஸ்ரீபெரும்புதூர், பொள்ளாச்சி, துடியலூர், திருப்பூர்–1, உடுமலைப் பேட்டை, காட்டூர்–1, பீளமேடு, பெரியநாயக்கன்பாளையம், சிங்காநல்லூர் (நிலை), ராஜபாளையம், கோவில்பட்டி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருநகர், நாகர்கோவில், முனிச்சாலை, பழங்காநத்தம், திருநெல்வேலி, சிவகாசி, விக்கிரமசிங்கபுரம், பொன்னகரம், கும்பகோணம், ஆம்பூர், ராணிப்பேட்டை, பள்ளிபாளையம், சேலம் (நிலை), திருச்சிராப்பள்ளி (நிலை), ஓசூர், துவாக்குடி, அடையாறு, கோடம்பாக்கம், சைதாப்பேட்டை–1, தண்டையார்பேட்டை, |

| | | | |
|---|---|---|---|
| | | | அம்பத்தூர், பூந்தமல்லி, நந்தம்பாக்கம், பல்லாவரம் மற்றும் செங்குன்றம். |
| 5 | ஹோமியோ பதி | 3 – அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை. | 3 – தூத்துக்குடி, கோவில்பட்டி மற்றும் ஆவடி. |

## 4.7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம், கீழ்கண்ட பல்வேறு சமூக பாதுகாப்பு பலன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது

(1) **மருத்துவ உதவி**

தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் விரிவுப்படுத்தப்பட்ட மிகப்பெரிய வசதிகளில் ஒன்றாகும், (அ) முதன்மை சிகிச்சை (புறநோயாளி) மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு (உள்நோயாளி) (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை போன்றவை காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில்

சேர்ந்த நாள் முதல் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் அந்நிறுவனத்தில் பணியிலிருக்கும் வரை வழங்கப்படும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்ப சிகிச்சையும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் இரண்டாம் நிலை சிகிச்சை மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை வழங்கப்படுகின்றன.

(2) பேறுகால உதவி

பேறுகால உதவியாக பெண் காப்பீட்டு நபர்களுக்கு பேறுகாலத்தில் 26 வாரங்களுக்கும் முந்தைய இரண்டு பங்களிப்பு காலங்களில் 70 நாட்களுக்கு பங்களிப்பு இருப்பின் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து முழு ஊதியமும் வழங்கப்படும்.

(3) **சார்ந்துள்ளோருக்கான உதவி**

காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் சம்பளத்தில் 90 சதவீதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

(4) **உடல் நலமின்மைக்கான உதவி**

ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 91 நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட காப்பீட்டளர்களுக்கு ஊதியத்தில் 70% ரொக்க இழப்பீடாக உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித்தொகைக்கு தகுதி பெற, காப்பீட்டாளர்கள் 6 மாத காலத்தில் 78 நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

**(5) நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி**

34 வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 80% அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யப்படும்.

**(6) அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி**

செயல்திறன் வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி பெறுவதற்கு தகுதி உடையவர்கள் ஆகின்றார்கள்.

கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்கு சமமான

அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

**(7) இயலாமைக்கான உதவி**

**(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி**

காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது காயம் ஏற்பட்டால் எவ்வித பங்களிப்பு செய்வதை பொருட்படுத்தாமல் காப்பீட்டாளர்களுக்கான தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும். இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் 90 சதவீதம் மாதாந்திர தொகையாக தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும்.

**(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி**

காப்புறுதி செய்யப்பட்ட காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின் நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி சம்பாதிக்கும் திறனிற்கான இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக வழங்கப்படும்.

**(8) வேலையின்மைக்கான உதவி**

**(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா**

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ சந்தா தொகை வழங்குவதற்கு முன்பாக வேலை இழக்க நேரிட்டால் வேலையின்மைக்கான உதவித் தொகை வழங்கப்படும். அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அதிகபட்சமாக 2 வருடம் வரை அவர்களுக்கு 24 மாதங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் அவரது சராசரி தினசரி ஊதியத்தில் 50 சதவீதத்தை முதல் 12

மாதங்களுக்கும் அடுத்த 12 மாதங்களுக்கு 25 சதவீதமும் வழங்கப்படும்.

**(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமானது காப்பீட்டாளர் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருந்தால் வருவாயில் 25 சதவீதத்திற்கு மிகாமல் 90 நாட்கள் வரை இழப்பீட்டு தொகையினை பணப்பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும்.

**4.8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள்**

**1. இறுதி சடங்கு உதவி**

காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.15,000/– வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்து அவரைச்

சார்ந்தவர்களுக்கோ அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் நபருக்கோ வழங்கப்படும்.

2. பேறுகால செலவுகள்

காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால் ரூ.7,500/– பேறுகால படியாக வழங்கப்படும்.

3. முதியோர் மருத்துவ பராமரிப்பு

குறைந்தபட்ச பங்களிப்பாக வருடத்திற்கு ரூ.120/– செலுத்தியிருந்தால் வயது முதிர்வு ஓய்வு அல்லது விருப்ப ஓய்வு / பணியாளர் ஓய்வுத் திட்டம் மற்றும் நிரந்தர இயலாமை ஓய்வு பெறும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது மனைவிக்கு முதியோர் மருத்துவ வசதி வழங்கப்படுகிறது.

- ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி

சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

❖ தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவை நோய் தடுப்பு வசதிகளாக வழங்கப்படுகின்றன.

❖ தேசிய திட்டங்களான குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகின்றன.

### 4.9. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

மருத்துவமனை வளர்ச்சி குழு மூலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தக கட்டடங்களின் சிறிய மற்றும் பெரிய பழுது பார்க்கும் பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கு மருத்துவமனை வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு

ஈட்டுறுதி கழகத்தினால் மருத்துவமனை வளர்ச்சி குழு கூட்டத்திற்கு நேரடியாக நிதி வழங்கப்படுகிறது.

**4.10 காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவ செலவினை மீளப்பெறுதல்.**

**(1) தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)**

தொகுப்பு ஒப்பந்த அடிப்படையின் (**CGHS Rate**) கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட 52 சிறப்பு மற்றும் 133 உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு பணமில்லாத மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு

நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

### 4.11. புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறப்பு

2023–2024–ஆம் நிதியாண்டில் புதிதாக திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் பட்டியல் பின்வருமாறு.

| வ. எண். | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் | மாவட்டம் | காப்பீட்டு நபர்கள் | தொடங்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | மாமல்லபுரம் | செங்கல்பட்டு | 3,100 | 01.05.2023 |
| 2. | அடி அண்ணாமலைபுரம் | திருவண்ணாமலை | 3,852 | 01.05.2023 |
| 3. | விழுப்புரம் | விழுப்புரம் | 4,509 | 01.05.2023 |
| 4. | விக்கிரவாண்டி | விழுப்புரம் | 2,491 | 01.05.2023 |
| 5. | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 3,192 | 01.05.2023 |
| 6. | நெல்லியாளம் | நீலகிரி | 1,933 | 01.11.2023 |

## 4.12. காப்பீட்டாளர்களுக்கு உயிர் காக்கும் மருந்துகள் வழங்குதல்:

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் தேவைகளின் அடிப்படையில், அனைத்து அத்தியாவசிய மற்றும் துணை மருந்துகளும் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. மேலும், புற்றுநோயியல், குருதியியல் மற்றும் சிறுநீரகவியல் ஆகியவற்றிற்கான உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் காப்பீட்டு நபர்களுக்கு தேவைக்கேற்ப மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப, உடனடியாக வழங்கப்படுகின்றன.

## 4.13. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் வசதிகள் வலுப்படுத்துதல்

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையை அளிக்கும்

பொருட்டு, மதுரையில் உள்ள 200 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை மறுகட்டுமானம் செய்வதற்கான மாற்றியமைக்கப்பட்ட / திருத்திய கருத்துருவினை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தயாரித்து வருகிறது.

**சி.வி.கணேசன்**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.